# கனடாவில் எம்மவர்கள்

## மூன்று நாடகங்களின் தொகுப்பு



ஆக்கம் :

**துறையூரான்**

# கனடாவில் எம்மவர்கள்

## மூன்று நாடகங்களின் தொகுப்பு

- மனமாற்றம்
- வேர்களும் விழுதுகளும்
- கனடாவில் காமாசாஸ்திரி

ஆக்கம் :

துறையூரான்

ஸ்ரீ லங்கா வெளியீடு
யாழ்ப்பாணம், இலங்கை.

# நூல் பதிப்பு விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கனடாவில் எம்மவர்கள்<br>மூன்று நாடகங்களின் தொகுப்பு |
| நூலாசிரியர் | : | சின்னையா சிவநேசன் (துறையூரான்) |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| முதற் பதிப்பு | : | வைகாசி 2010 |
| கணினி வடிவமைப்பு | : | Sharlee Graphics<br>Colombo - 13. |
| வெளியீடு | : | ஸ்ரீ லங்கா புத்தகசாலை<br>யாழ்ப்பாணம், இலங்கை. |
| விநியோகம் | : | லங்கா புத்தகசாலை<br>F.L. 1/14, டயஸ் பிளேஸ்,<br>குணசிங்கபுர, கொழும்பு – 12.<br>இலங்கை.<br>Tel : 011-2341942<br>Fax : 011-2459431 |
| விலை | : | இலங்கையில் – ரூ. 150.00<br>ஏனைய நாடுகளில் – US$ 3.00 |

# அணிந்துரை

'கண்டார் ரசிப்பது நாடகம்' எனக் கூறுவார்கள். நாம் சொல்ல வேண்டிய கருத்துக்களை பாமர மக்களுக்கும் இலகுவில் நாடகமூலம் தெரிவித்து விடலாம். 'கனடாவில் எம்மவர்கள்' என்ற இந்நாடக நூல் மூன்று நாடகங்களைத் தன்னகத்தே கொண்டு, சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கிறது. நண்பர் சின்னையா சிவநேசன் (துறையூரான்) ஒரு பன்முகச் சிந்தனையாளன் என்பதைப் புரிந்து கொண்டேன். எழுத்தாளன் தன்னைப்பற்றி நினைப்பதில்லை. தான் வாழும் சமூகத்தை உற்று நோக்கி அவலங்களை அலசிப் பார்க்கிறான். அந்த அவலங்களுக்குரிய காரண, காரியங்களை அர்த்தபுஸ்டியோடு அணுகிக் குறைபாடுகளை நீக்கி நல்லனவற்றை நிலைநிறுத்த முயல்கிறான். நினைக்கின்ற அல்லது தோன்றுகின்ற கருத்துக்களைப் பல்வேறு பாத்திரங்கள் ஊடாகத் தெரிவித்துப் பார்ப்பவர்களது மனங்களைச் சிந்திக்க வைக்கின்றான். அந்தச் சிந்தனை ஊடாகச் சாதனைகளைப் படைக்கிறான்.

இந்நூலாசிரியர் திரு. சின்னையா சிவநேசன் (துறையூரான்) கடந்த இரண்டரை சதாப்தங்களாகக் கனடாவில் வாழ்பவர். ஈழத்திலும் வாழ்ந்து இன்னலை அனுபவித்தவர். இந்த இரண்டு நாடுகளிலும் வாழ்க்கையைப் புரிந்தவர். பண்பாட்டு விழுமியங்களின் தாற்பரியங்களை நன்குணர்ந்தவர். புலம் பெயர்ந்து வாழும் பெற்றோர்களின் மன ஏக்கங்களைத் தரிசிப்பவர். பண்பாட்டு விழுமியங்கள் நம்மை விட்டுப் போகாது தடுக்கும் மனவைராக்கியத்தை உணர்ந்தவர். தனது நாடகங்கள் ஊடாக நல்லனவற்றை எடுத்தியம்பும் ஆற்றல் மிக்கவர். அதே வேளை பன்னாட்டு மக்களும் வாழும் சமூகத்தில் நமது இளையோர்கள் படும் மன உளைச்சல்களையும் நன்குணர்ந்தவர். சமூக உளவியலைப் புரிந்தவர். அதனாற்தான் சமூகத்தின் ஊடறுப்புக்களை அவரால் புரிந்து கொள்ள முடிகிறது. அதற்கேற்ப உரையாடல்களையும், பாத்திர அமைப்புக்களையும் கையாளக் கூடியதாய் உள்ளது.

மனமாற்றம் என்ற முதலாவது நாடகத்தில் இருவேறு புலங்களில் நிகழ்வதை மூன்று காட்சிகளில் ஐந்து பாத்திரங்கள் ஊடாக படம்பிடிக்கிறார். யாழ்ப்பாணத்தில் லிகிதர் கந்தசாமி வீட்டில் ஒரு காட்சியைக் காட்டுகிறார். தாய் மரகதம், தந்தை கந்தசாமி, மகள் உஷா ஆகியோரிடை நடக்கும் மனஉளைச்சல்களை விபரிக்கிறார்.

அடுத்துக் கனடாவில் வாழ்க்கை முறையை பாத்திரங்கள் ஊடாகப் பேசவைக்கிறார். வெளிநாட்டுக்கு எடுத்த எடுப்பிலேயே போகமுடியாது என்பதையும், போகின்றவர்கள் படும் அவலங்களையும் குறிப்பிடுகின்றார். இன்றைய சமூகத்தில் வெளிநாடுகளுக்குப் போவதற்காக. மனமொவ்வாத பெண்ணையும் பதிவு செய்து அந்தப் பணத்தினில் வெளிநாடு போய் உல்லாசமாக வாழும் மனிதர்களையும் வெளிக்காட்டுகின்றார்.

இரண்டாவது காட்சியில் கனடாவில் மாமி அற்புதம், வீட்டுக்கு உஷா வந்துவிடுகிறாள். அங்கே அற்புதத்தின் மகள் ஊர்மிளா மூலம் கலாசாரச் சீரழிவை நாசுக்காகச் சொல்கிறார். ஊர்மிளா ஆங்கிலம் கலந்த தமிழில் பேசுவதைக் காட்டியிருக்கிறார். அதேவேளை கணேஷ் அங்கு வந்து சேருகிறான். உரையாடல் மூலம் பல விடயங்களைப் புட்டு வைக்கிறார். இதுதான் புலம்பெயர் நாடுகளில் நடக்கும் வாழ்க்கை முறை... அத்துடன் ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி என்பதற்குச் சாட்டையடி கொடுக்கிறார்.

'வேர்களும் விழுதுகளும்' என்ற நாடகத்தின் ஊடாக தலைமுறை மாற்றத்தை அருமையாக விளக்குகிறார். புலம்பெயர்ந்த மக்களது வாழ்க்கையில் தினந்தினம் வீசும் பனிப்புயல்களை உரையாடல் மூலம் விளக்கியிருக்கிறார். சச்சி என்ற பாத்திரம் சிறந்த ஆற்றுப்படுத் துனராக(Counselor) காட்டுகிறார். கோபிகாவும், கோபாலும் அவர்கள் வாழுகின்ற சூழலில் அனுபவிக்கும் துயரங்களைக் கூறுகின்றார்கள். அந்த இளம்வயதினரை எப்படிக் கையாள வேண்டும் என்பதை சச்சியின் விளக்கம் நன்றாக இருக்கிறது. இதனை எவ்வாறு மேடையில் அரங்கேற்றப் போகிறார்கள் என்பதில்தான் நாடகத்தின் வெற்றி தங்கியுள்ளது. ஆதலால் இந்த நாடகத்தை நெறியாளும் நுட்பத்தில் வெற்றி தங்கியுள்ளதை அனுமானிக்க முடியும். தினமுழைத்து வாழுகின்ற தினக்கூலிகளாக வெளிநாட்டு வாழ்க்கை முறை அமைந்துள்ளதை அழகாக உரையாடலில் தந்து விளங்க வைக்கிறார். வெளிநாடுகளில் வாழ்கின்ற மக்களது அகவய, புறவய வாழ்க்கை முறைகளை அனுபவரீதியாக பாத்திரங்கள் ஊடாக வெளிப்படுத்துவது சிறப்பாக உள்ளது.

'கனடாவில் காமாசாஸ்திரி' ஒரு நகைச்சுவையான உரையாடலுடன் நகர்த்தப்படுகிறது. இந்திய, இலங்கைத் தமிழில் அமைந்த உரையாடல். பல அதிசயங்களைக் கூறி ஈற்றில் ஒரு உண்மையைச் சொல்கிறார். 'பிறீ என்னா நம்ம ஆளுக தலைவலியைக் கூட வாங்குவாங்க' என்று நக்கலடிக்கிறார்.

ஒட்டுமொத்தமாகக் கூறின் ஆசிரியர் தனது அனுபவத்தைப் பிறருக்கும் கூறி மக்களை விழிப்படையச் செய்கிறார். நகைச்சுவை மூலம் நமது கருத்துக்கள் இலகுவில் மக்களிடம் சென்றடையும்.. இதனை கலைவாணர் என்.எஸ். கிருஸ்ணன் தமது திறமையால் வளர்த்திருக்கிறார். கிண்டலில் எவ்வளவு உணர்வுகள் உள்வாங்கப் படுகின்றன என்பதை இந்நாடகங்களைப் படிப்போர்க்குப் புரியும். இந்நாடகங்கள் வெறுமனே கிண்டல்களாவோ அல்லது கேலிகளாகவோ அல்லாமல் சிந்தனையைக் கிளறி சீரிய வாழ்க்கை முறைக்கு இட்டுச் செல்வனவாகவும் அமைந்துள்ளன. இந்நாடகங்களைத் தந்துள்ள திரு.சின்னையா சிவநேசன் (துறையூரான்) பாராட்டப்படவேண்டி யவரே. அவரது இவ்வகை ஆக்கங்கள் நமது சமூகத்தைச் சீர்செய்யும் வாண்மை கொண்டன. அவரது சேவை சிறக்க வாழ்த்துக்கள்.

கேணிப்பித்தன் ச. அருளானந்தம்.
கல்விப் பணிப்பளர் (ஓய்வு) B.A,M.Lit, D.A, PhD. SLEAS.
37/7, மத்திய வீதி
உவர்மலை
திருகோணமலை
இலங்கை

## என்னுரை

கனடாவில் கால்பதித்து இருபத்திமூன்று ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் புலம்பெயர் தமிழர் பலரின் சிறப்பான முன்னேற்றத்தைக் கண்டு யாவரும் மகிழ்ச்சி கொள்ளுகின்றோம். அதே வேளையில் அவர்களிற் சிலர் பிரச்சனைகளையும் எதிர்நோக்கத்தான் செய்கிறார்கள். குறிப்பாக புலம்பெயர்ந்து ஆரம்பகாலங்களில் பல பிரச்சனைகளை எதிர்த்துப் போராடியே வாழ்க்கையை நடத்துகின்றனர். இவ்வாறான சூழலில் எமது சமுதாயத்தில் புரையோடியுள்ள முக்கிய மூன்று பிரச்சனைகளை அடிநாதமாக வைத்து மூன்று நாடகங்களை எழுதியுள்ளேன். இவை நீண்ட கால இடைவெளிகளில் எழுதப்பட்டவை. இவை காலத்தின் கண்ணாடிகள் எனக்கூறின் மிகையல்ல.

'வேர்களும் விழுதுகளும்' என்ற நாடகம் ஈழத்திலிருந்து கனடாவில் குடியேறிய ஒரு குடும்பம் எவ்வாறு கலாசார சூழல் மாற்றங்களினால் அல்லல் படுகின்றது என்பதையும் இதனால் பெற்றோருக்கும் இளைய வயதினருக்குமிடையே ஏற்படும் பிரச்சனைகள் யாவை என்பதையும் படம் பிடித்துக் காட்டுகின்றது.

'மனமாற்றம்' என்ற நாடகம் ஒரு இளங் குடும்பத்தின் அவல நிலையை எடுத்துக் காட்டுகின்றது. மணமுடித்த சில நாட்களில் மனைவியை விட்டுக் கனடாவுக்கு வந்த ஒருவரின் வாழ்க்கை எவ்வாறு அமைந்தது என்பது அதில் விளக்கப்பட்டுள்ளது. இது முழுவதும் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் அமைந்துள்ளது. இது ரொரன்ரோவில் மேடையேற்றப்பட்டது.

'கனடாவில் காமா சாஸ்திரி' என்ற நாடகம் வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. இதில் முக்கிய பாத்திரங்களான காமா சாஸ்திரியும் மனைவியும் ஐயங்கார் தமிழ் பேசுகிறார்கள். இவர்கள் பேச்சில் நகைச்சுவை இழையோடுவதைக் காணலாம். பிற பாத்திரங்கள் யாழ்ப்பாணப் பாணியில் பேசுகிறார்கள்.

இந்நூல் எனது இரண்டாவது நாடக நூல் ஏற்கனவே வெளியான 'தங்கச்சி கொழும்புக்கோ போகிறாய்? 'என்ற நாடகம் பலரது வரவேற்பையும் பெற்றது. ரொரன்ரோவில் அண்மைக்காலங்களில் ஒவ்வொரு வாரமும் நூல் அரங்கேற்றங்கள் நடைபெறுகின்றன. நாடக நூல்கள் அரங்கேற்றப்படுவது மிகக்குறைவு. ஆனால் ஒவ்வொரு கலை நிகழ்ச்சியிலும் நாடகங்கள் மேடையேறுகின்றன.

இந்நூலை அச்சேற்ற முன்வந்த இலங்கை - யாழ்ப்பாணம் 234, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ லங்கா புத்தகசாலை நிறுவனத்தாருக்கும் குறிப்பாக அன்பர் செந்திலுக்கும் என் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக. யாழ்ப்பாணத்தில் 75 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இந் நிறுவனம் நூல்கள் வெளியீட்டிலும் விற்பனையிலும் சாதனை படைத்ததை யாவரும் அறிவர். இதன் உரிமையாளர்களில் ஒருவரான திரு. நா. கந்தசாமியையும் நான் நன்கறிவேன். அன்பர் செந்தில் திரு. நா. கந்தசாமியின் மூத்த புதல்வராவார்.

இந்நூல் பற்றிய உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன.

வணக்கம்.

சின்னையா சிவநேசன்
(துறையூரான்)

# மனமாற்றம்

## (நாடகம்)

எழுதியது - துறையூரான்

### நாடக மாந்தர்

| | | |
|---|---|---|
| 1. கந்தசாமி | - | அரசாங்க லிகிதர் |
| 2. மரகதம் | - | மனைவி |
| 3. உஷா | - | மகள் |
| 4. கணேஷ் | - | உஷாவின் மாப்பிள்ளை |
| 5. அற்புதம் | - | உஷாவின் மாமி |
| 6. ஊர்மிளா | - | அற்புதத்தின் மகள் |

### காட்சி - 1

[ இடம் :- யாழ்ப்பாணம் - லிகிதர் கந்தசாமி வீடு - மரகதம் சமையலறையில் வேலையாய் இருக்கிறாள் - மகள் உஷா வரவேற்பறையில் புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கிறாள் பிற்பகல் - லிகிதர் களைத்துப் போய் வீட்டுக்கு வருகிறார்].

**கந்தசாமி** :- (வந்தவுடன் -நாற்காலியில் அமர்ந்துகொண்டே) அப்பப்பா என்ன வெய்யில் ஆறு மணியாய்ப் போச்சு வெக்கை குறையவில்லை (சால்வையால் வீசுகிறார்) மரகதம் - மரகதம் -குடிக்கத் தண்ணி கொண்டாப்பா.

**மரகதம்** :- (உள்ளேயிருந்து கொண்டே) இருங்கோ கொண்டு வாறன்.

**கந்தசாமி** :- (மகளைப் பார்த்து ) என்ன பிள்ளை - ஏதாவது கடிதம் ஏதும் வந்ததோ? அல்லது பழைய கதைதானோ?

**உஷா** :- அதே கதைதான் அப்பா - ஒண்டும் வரயில்லை - நானும் ஒண்டையே சொல்லிச் சொல்லி அலுத்துப் போச்சு - நீங்களும் கேட்டுக்களைச்சுப் போனியள்.

**கந்தசாமி** :- (பெருமூச்சுடன்) பிள்ளை எனக்கிருக்கிற ஏக்கமும், அங்கலாய்ப்பும் உனக்கு விளங்குமெண்டு நினைக்கிறன். நாடிருக்கிற நிலையிலை உன்னை இஞ்சை வைத்திருக்கிறது மடியிலை நெருப்பைக் கட்டி வைச்சிருக்கிற மாதிரித்தான். ஒவ்வொரு நாளும் உன் பிரச்சனைக்கு ஒரு முடிவு வரும் வரும் என்று எதிர்பார்த்து நாங்கள் எல்லாரும் ஏமாந்துதான் மிச்சம். எதுக்கும் ஒரு எல்லையிருக்குப் பிள்ளை.

**உஷா** :- அப்பா நீங்கள் சொல்லுற தெல்லாம் எனக்கு வடிவாய் விளங்குது. நாங்களும் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வர ஏலாது. அங்கை என்ன பிரச்சனை எண்டு வடிவாய் விசாரிக்கத் தானே வேணும்.

**மரகதம்** :- (கையில் செம்புடன் வந்து கொண்டே) வந்ததும் வராததுமாய் தொடங்கியிட்டியள் பழைய பல்லவி பாடுறதற்கு, தகப்பனும் மகளும். உங்கள் இரண்டு பேருக்கும் வேறை வேலை ஒண்டும் இல்லைப் போல கிடக்குது - முதலிலை தண்ணியைக் குடியுங்கோ வந்த களைப்புத் தீரட்டும் (செம்பை நீட்ட அவர் வாங்கிக் கொண்டே)

**கந்தசாமி** :- மரகதம் நீ ஏதோ இதிலை ஒண்டும் தொடர்பில்லாத ஆள் மாதிரிக் கதைக்கிறாய். எனக்கும் விளங்கும் உன்ரை மனோ நிலை. ஏதோ எங்களைச் சமாளிக்கிறதுக்காக இப்படி நடிக்கிறாய் என்ன?

**மரகதம்** :- நீங்கள் எதையெண்டாலும் சொல்லுங்கோ எனக்கு எப்பவோ அந்தப் பெடியனிலை இருந்த நம்பிக்கை எல்லாம்காற்றிலை பறந்து போட்டுது. இனி இதைத்திருப்பித் திருப்பிக் கதைக்கிறதாலை புண்ணியமில்லை. பாக்க வேண்டிய அலுவலைப் பாத்துப் பெட்டையை கெதியாய் அனுப்புகிறது தான் ஒரே வழி.

உஷா :- அம்மா - நாங்கள் அவசரப்பட்டாப்போல அவங்கள் விசா உடனை தந்திடுவாங்களே? எல்லாரும் அப்பிளை பண்ணிப் போட்டு வருஷக் கணக்காய்க் காத்துக் கொண்டிருக்கினம் என்றது உங்களுக்குத் தெரியுந்-தானே.

கந்தசாமி :- பிள்ளை உன்ரை கொம்மாவின்ரை கதைக்கு அடியுமில்லை நுனியுமில்லை (மரகதத்தைப் பார்த்து) விஷயத்தை விளங்காமல் கதைக்கிறாய் அப்பா நீ - அவன் கனடா போய் ஆறு மாசத்துக்கு மேலை ஆகுது. இன்னும் பெட்டைக்கு ஒரு கடதாசி கூடிப் போடயில்லை - போனவன் எங்கடை பெடியன் குமாரைத் தன்னும் கண்டு கதைச்சிருக்கலாம் - அதுவுஞ் செய்யவில்லை - சரி அதைவிடு - அங்கைரெலிபோனுக்கு உள்ளூருக்குப் காசில்லையாம். வயசு போனவை ஊர் வம்பெல்லாம் கதைக்கிறது போனிலைதானாம் - அப்படியிருக்க அதைத்தன்னுஞ் செய்தானே இவன் ஒரு அதிசயப் பிறவியாய்க் கிடக்குதப்பா.

உஷா :- அப்பா நான் ஏற்கனவே சொன்ன மாதிரி மனிசன் அங்கை என்ன கஷ்டப்படுகிதோ என்ன பிரச்சனையோ எண்டு நான் கவலைப்படுகிறன். களவாய்ப் போனவை எத்தனைக்குப் பயப்பிட வேணும்- சொல்லுங்கோ பாப்பம்

மகரதம் :- இஞ்சேர் பிள்ளை நீ இன்னும் சின்னப் பிள்ளையள் மாதிரிக் கதைக்காதை கேட்டுதே - அங்கை போறவை ஒருத்தரும் கஷ்டப்படத் தேவையில்லை எண்டு, அண்டைக்கு அவர் எங்கடை சிறாப்பர் அருணாசலத்தின்ரை மகன் சபர் சொன்னவன். போன உடனை மாசா மாசம் ஆளுக்கு அறுநூறு, எழுநூறு டொலருக்குக் கிட்ட பிச்சை சம்பளம் கொடுக்குதாம் அரசாங்கம். அதிலை இராசா மாதிரி சீவியம் நடத்தலாமாம். அதிலை மிச்சம் பிடிச்சுக் சீட்டுப் போட்டு எங்கடை சனம் கொண்டாக் காரெல்லே வேண்டி ஓடுதுகளாம் -ரெடிக் காசு கொடுத்து.

கந்தசாமி :- இஞ்சேர் அப்பா - அங்கை அவர்கள் கொண்டாக் காரிலை ஓடினாலென்ன அண்டாவிலை ஓடினாலென்ன அதைப் பற்றி எங்களுக்குத் தேவையில்லை. இப்ப இவள் பிள்ளையின்ரை நிலைமையப் பற்றித்தான் நாங்கள் நல்லாய் யோசிச்சு ஒரு முடிவெடுக்க வேணும்.

உஷா :- அப்பா நீங்கள் வீணாய்க் கவலைப்படாதேங்கோ - அவர் அப்படி ஏமாத்துகிற ஆள் இல்லை - முதல் அவர் கனடாவுக்குப் போய்ச் சேர்ந்திட்டாரோ என்டு நாங்கள் நிச்சயமாய் அறிய வேணும்.

மரகதம் :- என்ன விசர்க்கதை கதைக்கிறாய் - அவன் ஆக்களை அனுப்பிற வைத்தி கொப்பருக்குச் சொன்னவன் தானே பத்து நாளையிலை பத்திரமாய்ப் போய் சேர்ந்திட்டானென்று. ஏன் அவர் கூடப் போன பொடியன் வீட்டுக்கு அறிவிச்சது உனக்குத் தெரியாதே.

உஷா :- வைத்தி இப்படித்தான் சொல்லி எத்தனை சனம் இடைநடுவிலை இன்னும் நிண்டு தத்தளிக்குதுகள். அவங்கள் ஏத்திப் போட்டு பைலை மூடிப் போடுவாங்கள் போய்ச் சேந்தாலென்ன செத்தாலென்ன எண்டு

மரகதம் :- அப்ப உன்ரை புருஷன் இடை நடுவிலை நிக்கிறா ரெண்டு சொல்லிறியோ - அப்ப ஒரு கடிதம் தன்னும் போட்டிருக்கலாந்தானே?

உஷா :- ஒரு வேளை போட்ட கடிதத்தை ஆமிக்காரன் கிழிச்செறிஞ்சானோ - தெரியாது.

மரகதம் :- அது சரி - இப்ப எல்லாத்துக்கும் ஆமிக்காரனைச் சாட்டுறது வழக்கமாய் போச்சுது - அவன் உன்ரை மனிசன் போடுகிற காயிதத்தைப் பாத்துக் கிழிச்சுப் போட்டானாக்கும் என்ன? சும்மா எங்களுக்குக் காது குத்தாதை - படிப்பறிவு இல்லாட்டியும் எனக்கு உலகறிவு இருக்குது.

கந்தசாமி :- சரி சரி - இப்ப நீ ஏன் அவளோடை பாயிறாய் - அவள் இப்ப வழக்கமாய் நடக்கிற விஷயத்தைச் சொன்னாள்.

ஆனால் கொம்மா சொல்றதும் சரிதான். உனக்குக் கலியாணம் எழுதின அண்டே அவன் உன்ரை புருஷன். சட்ட ரீதியாக நீங்கள் கணவனும் மனைவியும். அந்த நம்பிக்கையிலைதான் நாங்கள் காசைக் காசென்று பாராமல் 15 லட்சத்துக்குக் கிட்ட செலவழித்து அவனை அங்கை அனுப்பினது. அதுவும் அவன் குமார் எவ்வளவு கஷ்டப்பட்டு இரவாய்ப் பகலாய் இரண்டு
வேலை செய்து உழைச்ச காசென்று உனக்குத் தெரியும்.

மகரதம் :- என்ரைபிள்ளை ஊண் உறக்கமில்லாமல் உழைச்ச காசு. நாங்கள் இங்கை பாங்கிலயா இவ்வளவு காசு வைச்சிருந்தனாங்கள். கலியாணம் பேசி வரேக்கை அவன்ரை தாயும் தகப்பனும் எவ்வளவு குழைஞ்சு குழைஞ்சு வந்து திரிஞ்சவை. இப்பவழி தெருவிலை கண்டாலுங் கதைத்கினையில்லை. எனக்கென்னவோ இதுக்கை ஏதோ விஷயமிருக்கெண்டு தான் ஒரு சமசியம்.

உஷா :- அம்மா உங்களுக்கு ஒருத்தரிலையும் நம்பிக்கையில்லை. எல்லாரிலையும் ஒரு ஐமிச்சமும் நம்பிக்கையீனமுந்தான் இப்படி எண்டால் இந்த உலகத்திலை வாழ ஏலாதம்மா.

மரகதம் :- பிள்ளை நீ இப்ப எனக்குப் புத்தி சொல்ல வந்திட்டாய் என்ன? எல்லாம் அப்ப தலைகீழ்தான் ஏதோ நானும் நினைச்சதைச் சொன்னன். இனி தகப்பனும் மகளும் பட்ட பாடு - எனக்கு அலுவல் கிடக்குது நான் வாறன் (உள்ளே போகிறாள்)

கந்தசாமி :- அது சரி பிள்ளை அவன் அண்ணன் எங்களுக்கு ஸ்பொன்சர் அப்பிளிக்கேசன் பண்ணி எவ்வளவு காலமாகுது.

உஷா :- அது இப்ப ஏறக்குறைய எட்டு மாதத்துக்கு மேலை இருக்கு மென்று நினைக்கிறன். அவர் ஸ்பொன்சர் அனுப்பி இரண்டொரு மாதத்திலை தானே இந்தச் சம்பந்தம் வந்து சேர்ந்தது.

கந்தசாமி :- 'ஓம், ஓம்' எனக்கு இப்ப ஞாபகம் வருகுது. ஸ்பொன்சர் சரி வந்தால் இரண்டு பேரும் சேர்ந்து போகலாமென்று சொன்னதைக் கேட்காமல் - உடனை ஒழுங்கு பண்ணுங்கோ என்று ஒத்தைக் காலிலை நிண்டவன். இப்ப அங்கை ஆறு மாசத்திலை எல்லாம் பேப்பர் கொடுக்கிறாங்கள் - ஸ்பொன்சர் வருஷக் கணக்காய் இழுக்குமெண்டு சொல்லித் துடியாய் துடிச்சான், நான் நினைக்கிறன் இப்ப பேப்பரெல்லாம் கிடைச்சிருக்கு-மெண்டு.

உஷா :- அப்படியென்றால் திடீரென வந்து கூட்டிக் கொண்டு போனாலும் போவார் எண்டு நினைக்கிறன்.

கந்தசாமி :- ஓம் - ஓம் - கடிதம் கூடப் போடாதவன் உடனை வந்து உன்னைக் கூட்டிக் கொண்டு போவான் என்று உனக்கும் ஒரு நப்பாசை. அதுசரி உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. அதுதான் பெண் புத்தி பின்புத்தி எண்டு சொல்லுறது. இவங்கள் என்னும் எங்களை இண்டர்வியூக்கே கூப்பிடயில்லை. இனி எல்லாம் செய்து விசாவர விடிஞ்சிடும் போலை கிடக்குது. எல்லாம் எங்கடை கெட்ட காலம் (பெருமூச்சு)

உஷா :- அப்பா நீங்கள் இப்ப கவலைப்படுகிறதாலை ஒரு பிரயோசனமுமில்லை - நடக்க வேண்டியதுதான் நடக்கும் எதற்கும் ஸ்பொன்சர் சரி வந்தால் எல்லாப் பிரச்சனையும் தீர்ந்து விடும். இப்ப எல்லாம் கெதியாய் கொழும்பு ஹைக் கொமிசனிலை செய்யிறாங்களாமென்று கேள்வி.

கந்தசாமி :- விசா வந்தால் நீ முதலிலை போ - அங்கை அற்புதம் மாமி வீட்டிலை நிக்கலாம் - நாங்கள் யோசிச்சு தான் வெளிக்கிடவேணும்.

உஷா :- எல்லாத்துக்கும் விசா வரட்டும் பிறகு யோசிப்பம். நீங்கள் போய் கால் முகத்தைக் கழுவுங்கோ.

கந்தசாமி :- ஓம் - ஓம் - (எழும்பிப் போகிறார்)

## காட்சி - II

[இடம் :- கனடா - அற்புதம் மாமியார் வீடு - மாலை நேரம் உஷா வரவேற்பறையிலிருந்து ஏதோ வாசித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் ஊர்மிளா உள்ளே வருகிறாள்.]

**ஊர்மிளா** :- Hi உஷா

**உஷா** :- Hi, எப்படி உன்ரை வேலையெல்லாம் போகுது ஊர்மிளா

**ஊர்மிளா** :- NOT BAD. JUST MANAGING

**உஷா** :- உன்ரை OFFICE இலை எங்கடை தமிழாக்கள் ஆரன் வேலை செய்யினமே.

**ஊர்மிளா** :- YES, BUT I DON'T MOVE WITH THEM. THEY ARE BEHAVING LIKE COUNTRY BRUTES.

**உஷா** :- என்ன சொன்னனி? எங்கடை தமிழாக்கள் பட்டிக்காடுகளோ. உனக்குக்கனடா நல்லாப் பிடிபட்டுத்தான் போச்சுது. அதுசரி நீ தமிழிச்சியோ.. அல்லாட்டி... உனக்கு எங்கடை ஆக்களின்ரை அறிவு, ஆற்றல் ஒண்டுந் தெரியேல்லை. பாத்தால் பட்டிக்காடு மாதிரித்தான் தெரியும். ஆனால் பழகிப் பாத்தியெண்டாத் தான்தெரியும் அவேயிட்டையிருக்கிற ஆற்றலும் பெருமையும் எப்படியெண்டு.

**ஊர்மிளா** :- OH; YA

**உஷா** :- அது சரி நான் தமிழிலை கேட்டால், நீ (ENGLISH) இங்கிலீசிலை மறுமொழி சொல்லுறாய், ஏன் தமிழ் பேச வராதோ அல்லாட்டி உன்னை, மற்றவை வெள்ளைக்காறி யெண்டு நினைப்பினமெண்டு உனக்குள்ளை ஒரு நினைப்போ (மாமியார் - அற்புதம் உள்ளே வருகிறார்)

**அற்புதம்** :- நல்ல கேள்வி கேட்டா(ய்) பிள்ளை. என்னையே பட்டிக்காடெண்டிறாள் என்ரை மேள். இஞ்சை வந்தவுடனை எங்கடை ஆக்களுக்கு மொழி, மதம், கலாச்சாரம் எல்லாமே மறந்து போகுது. கொஞ்ச நாளிலே தாயையும் மறந்து போவினம்.

**உஷா** :- மாமி, இதெல்லாம் எங்கடை ஆக்களுக்கிருக்கிற தொற்று நோய். எங்கை போனாலும் அந்த நாட்டுக்காறரைப் போல மாற நினைக்கிறது. எதைச்சேர்க்கிறது எதை விடுகிறதெண்டு தெரியாமை எல்லாத்திலையும் மயங்கிறது. எல்லாம் அரைகுறைப்படிப்பாலை வாற கேவலம் முழுசாப்படிச்சா நல்லாயெல்லே வந்திடுவினம்.

**ஊர்மிளா** :- WHAT ARE YOU ALL TAKING. I CAN'T FOLLOW ANYTHING (ஊர்மிளா உள்ளே போகிறாள்)

**அற்புதம்** :- உஷா, நாங்கள் இஞ்சை வந்து பத்து வருசமாச்சு. உன்ரை மாமாவும் செத்து. ரெண்டுவருசம் முடிஞ்சுது. இந்தபத்து வருச அனுபவத்திலையும் நான் கண்டது, நாங்கள் பின்பற்றினதெல்லாத்தையும் விட்டிட்டு, வெள்ளக் காறனைப் பாத்து நடக்கிறதைப் போல மடைத்தனம் வேறொண்டுமில்லை. இஞ்சை கனடாவில் அவரவர் தங்கடை சமயம், கலாச்சாரம் எல்லாத்தையும் பேணிப் பாதுகாக்கலாமெண்டு சொல்லி, அதை ஊக்கு விக்கிறதுக்குக்கூடி அரசாங்கம் பண உதவி செய்யுது.

**அற்புதம்** :- அதைக் கவனிக்கிறதுக்கெண்டு தனியா ஒரு அமைச்சை ஏற்படுத்தி, அதுக்கு பல்லினக் கலாச்சார அமைச்செண்டு பேருங்கூட வைச்சிருக்கிறார்கள். இந்த மாதிரி அமைச்சு வேறை எந்த நாட்டிலையிருக்கு?

**உஷா** :- அப்படியே சங்கதி. இதொரு திறமான நாடா(ய்)க் கிடக்குது

**அற்புதம்** :- எங்கடை சனம் செய்யிற திருகுதாளங்களாலை எல்லாருக்குங் கெட்ட பெயர். எங்கடை பிள்ளையள் தமிழ் படிக்கிறதுக்காக தமிழ் வகுப்புகளை ஒழுங்கு செய்து, அதுகளைப் படிப்பிக்கிற வாத்திமாருக்கு இஞ்சையுள்ள கல்விச்சபையள் சம்பளம் வேறை குடுக்குது. அந்த வாத்திமார் என்ன செய்யினமெண்டா, தங்கடை பிள்ளையளுக்கு பியானோவும், டான்சும் படிப்பிக்கினம், வீட்டிலை அதுகளோடை இங்கிலீசிலை தான் கதைக்கினம். தமிழ் சரியா எழுத, பேசத்தெரியாத

அங்கை இலங்கேலை கந்தோர்வழிய உத்தியோகம் பாத்தவையும் வீட்டிலை சும்மா இருந்தவையும் இஞ்சை காசுக்காக திடீர் வாத்திமார் ஆகினம். இவையளிலே சில பேர் யாழ்ப்பாண வாசனையே இல்லாமல் கொழும்பில் சீவிச்சவை. உனக்கில்லையடி ஊருக்குத்தான் உபதேசம் எண்ட மாதிரி இவையெல்லாம் தமிழ் படிப்பிச்சா தமிழ் உருப்படுமே அல்லாட்டிப் பிள்ளையள் தான் தமிழை ஒழுங்காய்ப் படிக்குங்களோ, சொல்லு பாப்பம்.

உஷா :- உங்கடை கதையப்பாத்தா இஞ்கையும் எங்கடை சனம் தலைகீழ்தான் போலக்கிடக்கு. அது சரி மாமி, உங்கடை மகளின்ரை கோலமென்ன. அதேன் உப்பிடிப் பழக்கியிருக்கிறியள்.

அற்புதம் :- அதையேன் பிள்ளை கேக்கிறா(ய்), எல்லாம் உன்ரை மாமா கொடுத்த இடம். இடத்துக்குகேற்ற மாதிரித்தான் நடக்க வேணும், அவள் இனிக் கனடாவிலை தானே வாழப்போறளெண்டு சொல்லிச்சொல்லி, என்னை ஒண்டும் பேச விடாமப் பண்ணிப்போட்டார், அது கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பாப் போன கதையாக்கிடக்குது.

உஷா :- என்ன இருந்தாலும் மாமி எங்களுக்கெண்டொரு பண்பாடு, கலாச்சாரம் இருக்குது. அதெல்லாத்தையும் மறந்து நடக்க நீங்கள் விட்டிருக்கப்படாது. இது எங்கைபோய் முடியுமோவெண்டு தெரியாது மாமாவும் போய்ச்சேர்ந்திட்டார்.

அற்புதம் :- அஞ்சில வளையாதது அம்பதிலை வளையாதெண்டு சொல்லிறவை. ஏதன் சொன்னா என்னோடை சண்டைக்கு வாறாள். இங்கிலீசிலை கதைச்சே என்னை பேசாமல் செய்து போடுறாள். இதென்ன கோலமெண்டு என்னை எத்தனைபேர் கேட்டுப்போட்டினை. இந்த அலங்கோலத்தைக்காண எனக்கு மனம் பொறுக்குதில்லை (கவலைப்படுகிறார்)

உஷா :- மாமி, நீங்கள் இப்ப கவலைப்பட்டு பிரயோசமில்லை. அவள் சின்னனாக இருக்கும் போதே தமிழ்ப் பெண்ணைப் போல வளத்திருக்கவேணும்.

அற்புதம் :- உஷா, இனி அதைப் பற்றி கதைச்சுப் பலனில்லை. அதிருக்கட்டுக்கும், இப்ப உன்ரை நிலமை என்ன?

உஷா :- என்ரை நிலையைப் பற்றி நானே என்ன செய்யிறதெண்டு தெரியாத நிலை மாமி சுருக்கமாய்ச் சொன்னால், என்ரை பெற்றார் ஒருத்தரைக் கண்டுபிடிச்சு எனக்கு கலியாணம் எழுதிவைச்சினம் அவர் கனடாவுக்கு வரவேண்டுமெண்டு ஒற்றைக்காலில் நிண்டார். ஆர் சொல்லியுங்கேக்க மாட்டெண்டிட்டார். கடைசீலை அண்ணை அனுப்பினது, எங்களிட்டை இருந்தது, பத்தாக்குறைக்கு அம்மாவின்ரையை வித்தது, வட்டிக்குக் கொடுத்தது எல்லாத்தையுஞ் சேர்த்து பத்து லட்சத்தைச்சிலவழித்து ஆளை இஞ்சை அனுப்பிவைச்சம். அவ்வளவு தான் அதுக்கு பிறகு ஒரு கடிதமுமில்லை, தகவலுமில்லை. அண்ணை இஞ்சை எவ்வளவோ கஷ்டப்பட்டும் ஆளைச்சந்திக்க முடியேல்லை. சட்டப்படி கலியாணம் முடிச்சும் புருஷன் எங்கையெண்டு தெரியேல்லை.

அற்புதம் :- இது நடந்து இப்ப எவ்வளவு காலம்?

உஷா :- ஒரு பத்து மாசம் இருக்குமெண்டு நினைக்கிறன்.

அற்புதம் :- இதைப்பற்றி நீ யென்ன நினைக்கிறாய்?

உஷா :- நான் என்னத்தை நினைக்கிறது மாமி, அந்தாள் என்னை ஏமாத்திப்போட்டுதெண்டுதான் நினைக்கிறன். அங்கைவீட்டில இருக்கிறவரைக்கும் அம்மா, ஐயாவைச் சமாளிக்கிறதுக்காக அந்தாளுக்காக வாதாடினன். இனி அப்டியொரு நாடகமுமாடத் தேவையில்லை. உண்மையைக் கண்டுபிடிக்கிறது தான் அடுத்தவேலை. (இந்நேரம் ஊர்மிளா உடுப்பு மாற்றிவிட்டு அங்கு வருகிறாள்)

ஊர்மிளா :- LOOK USHA, YOU SPEAK VERY HIGHLY ABOUT OUR

PEOPLE SEE WHAT HAS HAPPENED TO YOU. எங்கடை ஆம்பிளையள் சரியான ஏமாத்துக்காறர். நீ அவயள நம்புறாய். YOU ARE; SO STUPID. THESE FELLOWS ARE CHEATS, DISHONEST AND UNRELIABLE.

**உஷா** :- ஊர்மிளா இதெல்லாம் அவரவற்றை தலை விதி. எங்கடை கலாச்சாரம் குடும்பம், கட்டுப்பாடு இதெல்லாத்தையும் அறிய வேணுமெண்ட அக்கறை உனக்கில்லை யெண்டுதான் கவலைப்படுறன். போலியை நிஜ மெண்டு நினைச்சு நீ ஏமாறுறாய்! உன்ரை கண்ணை மறைக்கிற உந்த ஆடம்பரங்களெல்லாம் பொய்யெண்டு உனக்குத் தெரியவரேக்கை உன்ரை வாழ்க்கேலை நீ மீண்டும் எழும்ப முடியாதளவு அதலபாதாளத்துக்குப் போயிரக் கூடாது. எனக்கு இப்படி நடந்தெண்டால் அது என்ர தலைவிதி.

**ஊர்மிளா** :- FATE, தலைவிதி... WONDERFUL... YOUR PEOPLE ARE ALLWAYS BELEIVING IN FATE.. IT IS REALLY FUNNY. எனக்கதிலை INTEREST இல்லை.

**உஷா** :- அம்மணி (தலையைக்காட்டி) CAPITAL இருந்தால் தானே INTEREST வாறத்துக்கு.

**ஊர்மிளா** :- WHAT CAPITAL? WHAT INTEREST?

**உஷா** :- நான் சொன்னது, CAPITAL உன்ரை தலேலை இருந்தால் தானே அதைப்பற்றி INTEREST வாறதுக்கு.

**ஊர்மிளா** :- (முறைத்தபடி) உஷா உன்ரை Philosophy எனக்குத் தேவேல்லை. நீ FATE எண்டு சொல்லிச்சொல்லியே அவங்களை SAVE பண்ணப் பாக்கிறாய். எங்கடை LADIES எல்லாம் இப்படித்தான். THATS IS WHY THESE MEN ARE TAKING ADVANTAGE HIGH TIME YOU GUYS WAKE UP.

**உஷா** :- DON'T SAY LIKE THAT. ALL MEN ARE NOT LIKE THE WAY YOU THINK.

**ஊர்மிளா** :- YOU ARE TRYING TO DEFEND THEM. YOU STILL HAVE THAT

SLAVE MENTALITY. YOU MUST GET OUT OF IT UNTIL THEN YOU WILL NOT BE FREE.

**உஷா** :- நீயதை அடிமைத்தனமெண்டிறாய். எங்கடை கலாச்சாரத்திலை, எங்கடை கூட்டுக்குடும்ப அமைப்பில் நாங்களதை ஆண் பெண்ணிடையே ஏற்படும் அன்புப்பிணைப்பெண்டிறம். ஓருத்தரையொருத்தர் சரியாப்புரிஞ்சு, ஒருத்தருக்கொருத்தர் விட்டுக் கொடுத்து வாழும் வாழ்க்கைக்கு நீ அடிமைத்தன மெண்டு பேரிட்டா நானதை எதிர்க்கிறன்.

**ஊர்மிளா** :- I SAY EQUAL RIGHTS. FIFTY FIFTY.

**அற்புதம்** :- ஊர்மிளா, நீ 50க்கு 50 கேட்கிறாய். எங்கடை குடும்பங்களிலை பொம்பிளையள் நூறுக்கு நூறு அனுபவிக்கினம். எத்தனையோ குடும்பங்களிலை பொம்பிளையள்வீட்டிலையிருந்து காலாட்ட ஆம்பிளையள் மாடா முறியிதுகளெண்டது உனக்குத் தெரியுமே? அது மட்டுமே குடும்பத்தைத் திட்டமிடுறதும் பெண்தான். கொண்டு நடத்திறதும் பெண்தான். எங்கடை பண்பாட்டை நல்லாப்புரிஞ்சு கொண்டியெண்டா உப்பிடிக்கதைக்கமாட்டாய்.

**ஊர்மிளா** :- CULTURE. பண்பாடு. WHAT IS ALL THESE? ARE THEY GOING TO GIVE US A COMFORTABLE LIFE.

**உஷா** :- உனக்கு அதின்ரை முக்கியத்துவம் விளங்காது. எத்தனையோ வெள்ளைக்காறர் எங்கடை பண்பாடு, கலாச்சாரம், சமயம் அதுகளைப்பிடிச்சு, ஆராச்சி செய்து அதுகளை மெச்சி அந்த வழியிலை வாழினம், ஆனால் உன்னைபோல் சிலபேரால் முழுப்பேருக்குமே அவமானம்.

**ஊர்மிளா** :- IT IS VERY DIFFICULT TO REFORM YOU GUYS. YOU ARE ALL DIEHARDS. NO POINT IN SPEAKING TO YOU ALL. I AM GOING OUT. "MOM" I MAY BE LATE.

**அற்புதம்** :- கண்டறியாத கனடாச்சீவியம். இரவு பகலெண்ட வித்தியாசமில்லை வயதுவந்திட்டா சுதந்திரமா ஆரும் என்னவும் செய்யலாமெண்டது தான் இந்த நாட்டு

வழிமுறை பெற்றார் தட்டிக்கேக்க ஏலாது. தவறி விழுந்தபிறகு இது கனடா தானேயெண்டு சட்டையை உதறிப்போட்டு வாழநினைக்கிறது. கனடாக்காறன் எத்தனையோ நல்ல பழக்கவழக்கங்கள் வைச்சிருக்கிறான். பன்னாடைகள், அதுகளை விட்டுட்டு படுகுழிலை விழுற பழக்க வழக்கங்களை இறுக்கிப் பிடியுங்கோ.

உஷா :- மாமி, அவளைச் சொல்லிக்குற்றமில்லை. அவள் அப்படி வாழப்பழகிவிட்டாள் நாங்கள் தான் எங்கடை பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பாதுகாக்க வேண்டும்.

அற்புதம் :- பிள்ளை நீ வந்து சாப்பிடு. எல்லாத்தையும் பிறகு யோசிப்பம்.

## காட்சி - 3

[அற்புதம் வீட்டு வரவேற்பறையிலிருந்து ஏதோ வாசித்துக் கொண்டிருக்கிறார் - அப்போது கதவு தட்டப்படும் சத்தம்கேட்கிறது].

அற்புதம் :- (கதவைப் பார்த்தபடி) கதவு திறந்திருக்குது வாருங்கோ

கணேஷ் :- (கதவைத்திறந்து உள்ளே வருகிறார்)

அற்புதம் :- (சிந்தனையோடு கணேசை உற்றுப்பார்த்தபடி)நீங்கள் ஆரைத் தேடிறியள்.

கணேஷ் :- என்ரை பேர் கணேஷ். உஷாவொண்டொராள் இஞ்சை இருக்கிறாவோ?

அற்புதம் :- கணேசண்டால்.. (சொல்லிக்கொண்டே சிந்திக்கிறா)

கணேஷ் :- ஓம்நான்தான், உங்களுக் கென்னெண்டு சொல்லிறண்டு விளங்கேல்லை. நான் தான் உஷாவின்ரை...

அற்புதம் :- ஆ.. இருங்கோ. (உள்ளே பாத்து) உஷா.. உஷா.. இஞ்சை உனக்கொரு VISITOR வந்திருக்கிறார், ஆரெண்டு வந்து பார்.

உஷா :- (கணேஷ் வந்த பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்திலிருந்து மேடைக்கு வருகிறாள். வந்தவள் அவனைக் கண்டதும்திடுக்கிட்டு இடையில் நிற்கிறாள்)

உஷா :- நீங்கள்.. நீங்களா?

கணேஷ் :- நான்தான்.. நான்தான் கணேஷ் உஷா..

உஷா :- ம்.. (பெருமூச்சு விடுகிறாள்) - இருங்கோ - இப்பதான் என்ரை ஞாபகம் வந்ததோ?

கணேஷ் :- உஷா! என்னை மன்னிச்சுக்கொள்.. நானொரு பெரிய பிழை விட்டிட்டன்.

உஷா :- பிழையோ!.. நீங்களோ.. என்ன பிழை?

கணேஷ் :- இவ்வளவு நாளும், உனக்குக் கடிதம் போடாமை விட்டது பெரிய பிழை.

உஷா :- அது இப்பதான் விளங்கிச்சுதாக்கும்.. ஒரு வருசம் எடுத்தது இதை விளங்கிக்கொள்ள!

கணேஷ் :- நான் உன்னோட கொஞ்சம் தனியாப் பேசவேணும்.

உஷா :- அதென்ரை மாமிதான். அவவுக்கு முன்னாலை கதைக்கலாம்.

அற்புதம் :- இல்லைப்பிள்ளை. நீங்களிருந்து கதையுங்கோ நான் போய் கோப்பி போட்டுக்கொண்டு வாறன் (உள்ளேபோகிறா)

கணேஷ் :- உஷா! நான் இவ்வளவு நாளும் ஒரு கடிதமும் போடேல்லையெண்டு ஆத்திரப்பட்டிருப்பாய்..என்ன!

உஷா :- சீ..உங்களைநினைச்சு,நினைச்சு சந்தோசப்பட்டனான். இப்பவாவது என்னரை ஞாபகம் வந்துதே.

கணேஷ் :- சீ.. பெரியொரு பிழை விட்டிட்டன்.

உஷா :- பிழை விட்டிட்டன், பிழை விட்டிட்டனெண்டு திரும்பத்

திரும்பச் சொல்லிறியள், என்ன பிழை யெண்டு சொல்லுங்கோவன். உங்களுக்கு என்ன நடந்துதோவெண்டு நான் ஏங்கின ஏக்கம் உங்களுக்கு விளங்குமே?

**கணேஷ்** :- சொல்லத்தான் போறன்... ஆனால் அதுக்குப்பிறகு நீ என்னிலை ஆத்திரப்படக்கூடாது.

**உஷா** :- ஆத்திரப்பட்டுத்தான் என்ன பிரயோசனம். ஆத்திரப்பட்ட காலமெல்லாம் போட்டுது.

**கணேஷ்** :- எனக்குத்தெரியும் உன்ரை வேதனை. சீ, நான் பெரிய பிழைவிட்டிட்டன்.

**உஷா** :- பெரியபுதிர் போடாமை, விசயத்தைச் சொல்லுங்கோவன்.

**கணேஷ்** :- நான்... நானுன்னை ஏமாத்திப்போட்டனெண்டு நினைக்கிறன். நீ யென்னை மன்னிக்கவேணும்.

**உஷா** :- (திடுக்கிட்டவளாக) என்ன! ஏமாத்திப்போட்டியளோ? அப்படியென்டா..வேறை கலியாணமேதும் செய்து போட்டியளோ?

**கணேஷ்** :- கலியாணஞ் செய்யேல்லை... ஆனா செய்திருப்பன், நல்லகாலந் தவறினது.

**உஷா** :- ஏன் அப்படிச்செய்யாமை விட்டனீங்கள்? எனக்காகவே? நல்ல மனிசனா இருக்குது.

**கணேஷ்** :- என்ன நீ - நக்கலடிக்கிறியே?

**உஷா** :- உங்களுக்குக் கலியாணம் மனிசி, குடும்பமெல்லாம் விளையாட்டு போலை கிடக்குது.

**கணேஷ்** :- ஆர் சொன்னதப்பிடி? உனக்கென்ன பைத்தியமே?

**உஷா** :- ஓம்! அதின்னும் பிடிக்கேல்லை. இன்னுங்கொஞ்சநாள் செண்டிருந்தா அதுகும் பிடிச்சிருக்கும். சரி, அதெல்லாம் கிடக்கட்டும்.. இப்ப உங்கடை நிலைமையென்ன?

கணேஷ் :- நான் உண்மேலை உன்னைக் கலியாணஞ் செய்ய நினைக்கேல்லை அம்மா, அப்பா வின்ரை கரைச்சல்லைதான், REGISTER பண்ண ஒத்துக் கொண்டனான். அதுவும் ஒரு ஐடியாவோடைதான் செய்தனான். அதாலைதான் REGISTER பண்ணினாப்பிறகும் உன்னைச் சந்திக்கிறதைக்குறைச்சு இஞ்சை வாறத்திலை முழுமூச்சா நிண்டனான்.

உஷா :- நீங்கள் சொல்லிறதைப்பாத்தா, ஏதோ மர்மக்கதை மாதிரியெல்லோ கிடக்குது.

கணேஷ் :- ஓம் எல்லாம் மர்மம் தான்.

உஷா :- மர்மக்கதையெண்டா எனக்கு நல்ல விருப்பம்.

கணேஷ் :- சும்மா பகிடியை விட்டிட்டு,நான் சொல்லிறதை கொஞ்சங்கேள்.

உஷா :- சரி சொல்லி முடியுங்கோ.

கணேஷ் :- உண்மேலை நான் இன்னொரு பிள்ளையைத்தான் காதலிச்சனான். அவளின்ரை குடும்பம் ரெண்டு வருஷத்துக்கு முந்தியே கனடாவுக்கு வந்திட்டுது.

உஷா :- ஓஹோ! அப்படியோ சங்கதி! அப்ப நீங்கள் எங்கடை காசிலை உங்கடை காதலியைத் தேடித்தான் இஞ்சைவந்தனியளெண்டு சொல்லுங்கோவன். அது சரி, இனி உங்கடை அடுத்த ஐடியா என்ன?

கணேஷ் :- இஞ்சை வந்த பிறகு அவள் நல்லா மாறீற்றாள். பார்ட்டி டான்செண்டுதிரியிறாள். கனடா நல்லாப்பிடிபட்டுப் போச்சுது.

உஷா :- அது நல்லதுதானே. நீங்களும் அவளோடை சேந்து ஆடிக்கொண்டு திரியிறது தானே.

கணேஷ் :- என்ரை ஐடியாவுக்கும், உதுக்கும் சரிப்பட்டுவராதெண்டு உனக்கே விளங்கும்!.

உஷா :- பெரிய GENTLE MAN. இன்னொருத்தியின்ரை வாழ்க்கேலை மண்போடுறது சரிப்பட்டு வருமாக்கும்!.

கணேஷ் :- உஷா! நீ அப்படிச்சொல்லக்கூடாது, நான் உன்னைக் கைவிடேல்லையே!

உஷா :- இதென்ன குழந்தைப்பிள்ளைக்குச்சொல்லிற கதை மாதிரியெல்லோ இருக்குது. அவள் இப்ப உங்களை விட்டிட்டு வேறையாளைப் பிடிச்சிருக்கிறாள்போலை அதுதான் இப்ப என்னைத் தேடி வந்திருக்கிறியளாக்கும். நல்ல மனிசன். ஒண்டு தவறினா மற்றதைப் பிடிக்கலாமெண்ட - நல்ல IDEA.

கணேஷ் :- நீயென்ன விசர்க்கதை கதைக்கிறாய்? சட்டப்படி நானுன்ரை கணவன் தானே.

உஷா :- ஓம் - ஓம். இப்பதான் கணவன், மனைவி, சட்டம் என்று சொந்தங்கொண்டாட வந்திருக்கிறியள். என்னை ஏமாத்தின காலமெல்லாம் போய், இப்ப அவள் ஏமாத்த வெளிக்கிட்டவுடனை இஞ்சை வந்திருக்கிறியள். நல்ல பிளான் தான்.

கணேஷ் :- பிளானுமில்லை, ஒரு மண்ணாங்கட்டியுமில்லை. நான்தானே ஒண்டையும் ஒளிக்காமை எல்லாத்தையுஞ் சொல்லியிருக்கிறனே.

உஷா :- சரி - சரி. இதுக்குமேலை கதையொண்டுந்தேவேல்லை. உங்களைப்போல ஏமாத்துக்காறரை சமுதாயத்திலை உலாவ விடுறதே பாவம். மானம், மரியாதை ஏதாவதிருந்தா இப்படியெல்லாம் செய்வியளே. நீங்களும் ஒரு மனிசரெண்டு வந்திட்டியள் மன்னிப்புக்கேட்க. உண்மையிலை, ரோசமிருந்தா ஏமாத்திவாங்கின காசைக்கொண்டந்து சுழட்டியெறியுங்கோ பாப்பம். (அற்புதம் கோப்பியுடன் வருகிறார்).

கணேஷ் :- உஷா! நீயேன் இப்படியெல்லாங்கதைக்கிறாய்? நான்தான் ஆரம்பத்திலையே மன்னிப்புக்கேட்டிட்டனே!

அற்புதம் :- உஷா! ஏதுக்கும் அவசரப்படாமை, கொஞ்சம் யோசிச்சுப்பேசு பிள்ளை.

உஷா :- மாமி! நானும் இவ்வளவு காலமும், இந்த மனிசனை முழுசா நம்பி, என்ரை ஆசை, ஆவல் எல்லாத்தையும் அடக்கியொடுக்கி நெருப்புக்கு மேலை நடக்கிற மாதிரித்தான் வாழ்க்கை நடத்தினனான். இனியும் மாமி நான் அப்படி நடக்கத் தயாராயில்லை.

அற்புதம் :- பிள்ளை! பிழைவிடுறது இயற்கை. அதை திரும்பத்திரும்பச் செய்தாத்தான் மன்னிக்கமுடியாது.

உஷா :- மாமி! எல்லாரும் பிழைவிடுறது தான். ஆனா என்ரை வாழ்க்கையோடை விளையாடின மனிசனோட என்னாலை சேர்ந்து வாழ முடியாது. (ஊர்மிளா வருகிறா)

ஊர்மிளா :- WHAT IS GOING ON HERE. I CAN'T UNDERSTAND, WHY EVERYONE IS SHOUTING. THIS IS LIKE SUBWAY (கணேசைப்பார்த்து) WHO IS HE?

உஷா :- இவர்தான்... கணேஷ்

ஊர்மிளா :- கணேஷ்... OH YA. I CAN REMEMBER THE STORY. HE IS THAT GUY. HI, HOW ARE YOU?

கணேஷ் :- FINE.... THANK YOU. BUT I DON'T KNOW YOU, WHO ARE YOU?

ஊர்மிளா :- DON'T WORRY ABOUT IT. I AM HER COUSIN. SO, YOU HAVE COME TO MEET YOUR DARLING, THAT IS NICE/

கணேஷ் :- ஏன் உங்களுக்குத் தமிழ் வராதோ?

ஊர்மிளா :- வரும்...வரும்... அதைப்பற்றி YOU DON'T WORRY. உங்கடை விசயம் என்ன மாதிரி?

கணேஷ் :- எங்கடை விசயமென்ன,. உஷாதான் ஆத்திரப்படுகுது.

**ஊர்மிளா :-** ஆத்திரம் - WHAT IS IT? உஷா, WHAT IS HE TELLING ABOUT YOU?

**உஷா :-** ஊர்மிளா! இந்த மனிசன் என்னைத்தேடி இப்பதான் வந்தது, நீ அவசரப்படாதை.

**ஊர்மிளா :-** உன்னைத்தேடிவந்தது. GOOD. WHAT WAS HE DOING ALL THESE DAYS.

**கணேஷ் :-** உஷா! உவவுக்கு உதெல்லாம் தேவையில்லாத கதை.

**ஊர்மிளா :-** ஏன்! நீர் செய்தது நல்ல வேலையா? YOU ARE A CHEAT AND AN OPPORTUNIST.

**கணேஷ் :-** DON'T TALK RUBBISH. I HAVE NOTHING TO DO WITH YOU.

**உஷா :-** நீங்களேன் அவள்ளை பாயிறியள். நான் பட்ட கஷ்டத்தைப் பாத்துப்போட்டுத் தான் அவள் உப்பிடிக்கதைக்கிறாள்.

**கணேஷ் :-** இது எனக்கும், உனக்குமிடேலையுள்ள தனிப்பட்ட விஷயம், இதிலை மற்றவை தலையிடத்தேவையில்லை.

**உஷா :-** அது எங்கடை தனிப்பட்ட விஷயம் எண்ட காலம்போய் இப்ப அது பொதுவிஷயமாப்போட்டுது. என்ரை சொந்தம் எண்ட முறையிலை அவள் பேசிறாள்.

**ஊர்மிளா :-** YOU ARE RIGHT உஷா. இவையெல்லாம் MUST BE TAUGHT A GOOD LESSON. தாங்கள் செய்யிறது சரி, மற்றவை WRONG எண்டு THESE GUYS ARE THINKING. IT IS A SHAME. நாங்கள் தான் இவையைத்திருத்த வேணும்.

**அற்புதம் :-** ஊர்மிளா. நீ பேசாம இரு. இது அவேன்ரை விசயம். நாங்கள் தலைப் போடத் தேவையில்லை.

**ஊர்மிளா** :- அம்மா - நீங்கள் பேசாம இருங்கோ. இவையெல்லாம் உங்களை CHEAT பண்ணி நல்லா இடம் பிடிச்சிட்டனை. THE SITUATION MUST CHANGE. WE HAVE TO CHANGE IT/

**கணேஷ்** :- இது கதை நீளுது. உஷா! நீ இப்ப நான் சொல்லிறபடி கேட்கப்போறியா? அல்லாட்டி அவேன்ரை எண்ணப்படி ஆடப் போறியோ.

**உஷா** :- உங்களுக்கும், எனக்குமிருந்த உறவு முடிஞ்சுபோச்சுது. இனி அதைப்பற்றிக் கதைக்கத் தேவையில்லை.

**ஊர்மிளா** :- YOU HAVE NO BUSINESS TO COME HERE. BETTER YOU LEAVE HER ALONE. அவதன்னைப் பார்த்துக் கொள்ளுவா நீர் ஒண்டு பயங்காட்டத் தேவையில்லை.

**கணேஷ்** :- ஏன் நீ இதிலை வீணாய் தலையிடுகிறாய். YOU MIND YOUR OWN BUSINESS.

**ஊர்மிளா** :- THIS IS MY BUSINESS. எனது மைத்துனியை ஏமாத்துப் பேர்வழிகளிலிருந்து காப்பாற்றுகிறேன்.

**கணேஷ்** :- அப்படியே - உன்னை போல ஆட்களுக்கு இந்த நாடு நல்ல வசதியாய்ப் போச்சுது. அதாலைதான் நீ கனக்கக் கதைக்கிறாய்.

**ஊர்மிளா** :- நீர் இப்ப கனக்கக் கதைக்காதையும். இப்ப நீர் செய்த மாதிரி உஷா, உமக்குச் செய்திருந்தால் - நீர் அவவை ஏற்றுக் கொள்வீரோ?

**உஷா** :- போதும் நீங்கள் இரண்டு பேரும் வீணாக வாக்கு வாதப்படாதேங்கோ. வாழ்க்கை சில பேருக்கு விளையாட்டு மாதிரி இருக்குது. அதுவும் அபலைப் பெண்களின் வாழ்க்கையோடு விளையாடுகிற உங்களைப் போன்ற உலுத்தர்களாலை ஆண்குலத்துக்கே அவமானம். போங்கோ வெளியாலை. முதுகெலும்பு இல்லாத உங்களைப் போன்ற ஆட்களோடு வாழ்க்கை

நடத்த ஏலாது. (கையிலிருந்த புத்தகத்தை நிலத்தில் ஏறிந்து விட்டு உள்ளே போகிறாள்)

**ஊர்மிளா :-** இனியாவது திருந்தி நடவுங்கோ - திருகுதாளங்களை விட்டுப் போட்டு.

**கணேஷ் :-** போதும் நிறுத்து - உன்ரை உபதேசத்தை. (ஆவேசத்துடன் வெளியேறுகிறான்)

**-திரை-**

# வேர்களும் விழுதுகளும்

(ஓரங்க நாடகம்)

பாத்திரங்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | பரந்தாமர் | - | தந்தை |
| 2. | பரிமளம் | - | மனைவி |
| 3. | கோபிகா | - | மகள் |
| 4. | கோபால் | - | மகன் |
| 5. | சச்சி | - | மாமனார் |

## காட்சி : 1

[சினிமாப் பாட்டொன்றுக்கு நடனமாடிக்கு கொண்டிருக்கிறாள் கோபிகா. 3 நிமிடங்களின் பின்னர் தாயார் பரிமளம் வெளியில் இருந்து வீட்டுக்குள் வருகிறார். ]

**பரிமளம்** :- இது என்ன பிள்ளை கோபிகா - இது என்ன வீடா சினிமாக் கொட்டகையா? பொம்பிள்ளைப் பிள்ளை என்றால் அடக்க ஒடுக்கமாக எல்லவோ இருக்கவேணும்? (கோபிகா தொடர்ந்தும் ஆடிக்கொண்டிருக்கிறாள். தாயார் ஆத்திரத்துடன் போய் பாட்டை நிறுத்துகிறாள். )

**கோபிகா** :- (எரிச்சலுடன்) இந்த வீட்டிலை நிம்மதியாய் இருக்க ஏலாது. சந்தோஷமாக இருக்கவும் ஏலாது. எந்த நேரமும் பேச்சும் ஏச்சும்தான்.

**பரிமளம்** :- என்ன! இப்ப உனக்கு வாய் வர,வர நீளுது. கொஞ்சங்கூட பெற்றவ என்று மரியாதை இல்லை உனக்கு எதிர்த்துப் பேசிறாய் என்ன?

**கோபிகா** :- உங்களுக்கு நான் எதாவது சொன்னால் கோவம் வந்திடும், கோவம் - This place is like a hell.

**பரிமளம்** :- என்ன! இங்கிலீசு நாலு வார்த்தை படிச்ச உடனை என்னை இங்கிலிசிலை திட்டுறியோ? நல்லது, நல்லது. எனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும். எவ்வளவு பாடுபட்டு, காணி பூமியை வித்து ஆமிக்காரனுக்குப் பயந்து, பரம்பரைச் சொத்துகளை யெல்லாம் விட்டிட்டுஎவ்வளவு கஷ்டப்பட்டு இங்கை வந்தனாங்கள் என்று உனக்கு நல்லாய் விளங்கும் என்ன?

**கோபிகா** :- போதும் போதும்! உங்கடை நாளாந்தப் பிரசங்கத்தைக் கேட்டுக் கேட்டுக் காது புளிச்சுப் போச்சு - Enough is enough. வேலையாலை வந்தால் பேசாமல் போய்

rest பண்ணுங்கோ! வீணாக என்னோடை சண்டை பிடிக்காதேங்கோ!

பரிமளம் :- என்ன உன்னோடை சண்டைபிடிக்கிறனோ, சண்டை? அது எங்கடை பிழை. அங்கை சண்டைபிடிக்காவிடாமல் இங்கை கூட்டிக் கொண்டு வந்தது எங்கடை பிழை. எந்த நாய் எந்தக் கதவாலை போனாலும் பரவாயில்லை என்று சொல்லிப்போட்டு, நாங்கள் பேசாமல் இருந்திருக்கவேணும். எத்தனை பேரிட்டைக் கெஞ்சி, மண்டாடி எவ்வளவு லட்சம் லட்சமாகக் கொடுத்து, உங்களை இங்கை கூட்டிக்கொண்டு வந்தனாங்கள் தெரியுமே?

கோபிகா :- Mommy திரும்பத் திரும்ப அதே கதைதான் இங்கை வந்த நாள் முதல் கதைச்சுக் கொண்டிருக்கிறியள். இப்ப என்ன தேவை? காசு தேவையென்றால் சொல்லுங்கோ, நான் படிக்கிறதை விட்டுப்போட்டு வேலைக்குப் போறன். சும்மா திருப்பித் திருப்பி நடந்ததைக் கதைச்சு no use - பார்க்கிற அலுவலைப் பாருங்கோ.

பரிமளம் :- என்ன, என்ன? எங்கை போறது என்று என்னைக் கேட்கிறியோ? என்ன சங்கதி? அந்த வெள்ளைகள் செய்யிற மாதிரி வெளிக்கிடுகிற எண்ணமும் இருக்கோ அம்மையாருக்கு?

கோபிகா :- என்ன கதைக்கிறியள்? ஆர் சொன்னது வெளிக்கிடுகிறது என்று? நீங்கள் ஏன் இப்ப இல்லாததை எல்லாம் கற்பனை பண்ணுறியள்? நான் சொன்னனானே அப்படி?

பரிமளம் :- பின்னை என்ன? எங்கைபோறது அங்கை போறதென்றகதைகள்? விசரர், பைத்தியக்காரர் மாதிரி பொடியள் றோட்டு றோட்டாய் திரியுதுகள் இங்கை ரொரொன்ரோவிலை. அந்தப் பிசாசுகள் மாதிரி நீயும்

திரியிற எண்ணமோ? இல்லை - அந்த எண்ணமும் இருக்கோ என்று கேட்கிறன்?

**கோபிகா** :- என்ன இது? நீங்கள்தான் தேவையில்லாமல் விசர்க் கதைகள் கதைக்கிறியள் - Stupid கதைகள் எல்லாம்!

**பரிமளம்** :- Stupid டோ? எனக்கு விளங்காதென்று நினைக்கிறியோ? எனக்கும் இதெல்லாம் விளங்கும். ஆகலும் என்னைப் பேச்சியென்று நினைக்காதை! ஓம் - பேசுறதை அளந்து பேசு என்ன! (ஓடிப்போய்ஓங்கிஅறைகிறாள்)

**கோபிகா** :- ஐயோ! ஐயோ! அடிக்காதையுங்கோ! (இந்நேரம் சச்சி வருகிறார்.)

**சச்சி** :-, இஞ்சே, பரிமளம் இதென்ன வேலை? நிற்பாட்டு! நிற்பாட்டு! இதென்ன ஊர் என்ற நினைப்போ? பக்கத்து வீட்டுக்காரன் பொலிசுக்கு அடிக்கப் போறான். அவங்கள் வந்து உன்னைக் கொண்டு போகப் போறாங்கள்.

**பரிமளம்** :- கொண்டு போகட்டும், பரவாயில்லை! நான் போன பிறகு இவையெல்லம் நிம்மதியாய் இருக்கட்டும். இப்ப என்னை இங்கை ஒருத்தருக்கும் பிடிக்குதில்லை ஓம் இந்த ஆறு முழத்தைக் காட்டிக் கொண்டு ஏன் திரிகிறாய் பட்டிக்காடுகள் மாதிரி என்றெல்லே என்ரை பிள்ளைகள் எனக்குப் புத்தி சொல்ல வெளிக்கிட்டுடினை.

**சச்சி** :- சரி சரி அதுக்காக இப்படி வயசு வந்த பிள்ளையை அடிக்கலாமோ? இங்கை இதெல்லாம் பெரிய குற்றமெல்லே? எங்கடைஊர் மாதிரியில்லை இங்கை.

**பரிமளம்** :- ஓம் அண்ணை, எனக்கு தெரியும் இதெல்லாம். ஆனால் பிள்ளையென்றால் ஆரோடை கதைக்கிறதென்று யோசித்துக் கதைக்க வேணும். "Stupid Kipid" என்று இவள் சொன்னால் ஆருக்குத்தான் ஆத்திரம் வராது சொல்லுங்கோ பாப்பம். நீங்களும் உங்கடை

பிள்ளைகளை வளக்கிறியள்தானே? அதுகள் உங்களை இப்பிடிப் பேசுறதுகளோ? இல்லை - நானும் இப்ப கொஞ்ச நாளாய்ப் பாத்துக் கொண்டு வாறன் - இவள் முந்தின ஆளில்லை - ஓம், நல்லாய் மாறிப்போனாள்.

சச்சி :- பிள்ளை, நீ போ உன்ரை அறைக்கு. நான் பிறகு கதைக்கிறன் உன்னோடை. (கோபி அழுதுகொண்டே போகிறாள்) இந்தா பரிமளம். நான் சொல்லுகிறன் என்று குறைவிளங்காதை. நாங்கள் ஊரிலை பிள்ளைகளை வளர்த்தமாதிரி இங்கை வளர்க்க ஏலாது. இங்கை சூழல், சுற்றாடல் பழக்க வழக்கமெல்லாம் மாறிப்போச்சு. நாங்களும் ஓரளவுக்கு எங்கடை போக்குகளையும் கடும் பிடிகளையும் மாற்றத்தான் வேணும்

பரிமளம் :- அண்ணை இதென்ன, கதைக்கிறியள்? கனடா வந்தால் நாங்கள் எங்கடை பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்களை மாத்தவேணும் என்று கட்டாயமில்லை, எங்கடை பிள்ளைகளை நாங்கள் அடிச்சு வளர்க்கிறதை ஆர் கேக்கிறவன்? இல்லை ஆர் கேக்கிறவன்?

சச்சி :- பொறு, பொறு ஆத்திரப்படாதை. இங்கை இருக்கிற சட்டம் பிள்ளைகளை அடிக்கிறதுக்கு இடங்கொடுக்காது. எங்கடை ஆட்கள் எத்தனையோ பேர் பிள்ளைகளைப் பறிகொடுத்துப்போட்டு கோடேறிக் கொண்டிருக்கினை தெரியுமா?

பரிமளம் :- இது நல்ல கதையாய் இருக்குது. பெற்று வளர்த்தவைக்குப் பிள்ளையை அடிக்க உரிமையில்லை என்றால் அரசாங்கமே பிள்ளைகளைப் பராமரிக்கட்டும். நாங்கள் பெத்துக் கொடுக்கிறம்.

சச்சி :- பிள்ளைகளை வளர்க்கிறதுக்கும் நல்வழிப்படுத்து

றதுக்கும் எங்களுக்கு உரிமையிருக்கு. ஆனால் பிழையைத் திருத்துறத்துக்கு அடிக்கவேணும் என்பதிலைதான் பிரச்சனையே இருக்கு.

**பரிமளம்** :- அப்ப அடிக்காமல் என்னென்று பிள்ளைகளை வளர்க்கிறது? அடியாத மாடு படியாதென்ற பழமொழியை மறந்து போனியளே.

**சச்சி** :- அந்தப் பழமொழி மாட்டுக்குத்தான் பொருந்துமே தவிர மனிசருக்கு இல்லை. அடிக்காமல் வேறு எத்தனையோ விதமாகத் திருத்துகிற வழியள் இருக்குது.

**பரிமளம்** :- அதென்ன வழிகள்? எங்களுக்குத் தெரியாத வழிகள் சொல்லுங்கோ, பார்ப்பம்.

**சச்சி** :- முதலில் பிரச்சனை என்ன என்பதைப் பிள்ளைகளோடு கதைச்சு, நன்கு விளங்கப்படுத்தி ஒரு நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தவேணும்.

**பரிமளம்** :- ஓம். எங்களுக்கு வேறை வேலையில்லை, அவையோடை இருந்து கதைக்கிறதற்கு.

**சச்சி** :- அங்கைதானே நீங்கள் பிழை விடுகிறயள். பிள்ளைகளுக்குப் பெற்றோரின் ஆதரவுதான் தேவை. அவைக்கும் புதிய சூழல் புதிய பழக்கவழக்கங்கள் அவையின்ரை பிரச்சனையை நாங்கள் அறிந்து அவைக்கு ஆதரவாய் இருந்து வழி நடத்த வேணும். அதை விட்டுப்போட்டு இப்படிச் சீறிப்பாய்ந்து அடித்தால் பிரச்சனை தீராது. அதுகளும் செய்யிறது என்ன என்று தெரியாமல் கெட்டவர்களோடு சேர்ந்து குட்டிச் சுவராய்ப் போகுங்கள்.

**பரிமளம்** :- அண்ணை, நீங்கள் எங்கடை பிரச்சனைகளையும் நல்லாய் விளங்கிக் கொள்ளவேணும். ஒரு சதமும் கையிலை இல்லாமல் உடுத்த உடுப்புகளோடைதான்

நாங்கள் இங்கை வந்தது. இந்தப் பிச்சைச் சம்பளத்திலை இருக்க எங்களுக்குப் பிடிக்காமல்தான் இரண்டுபேரும் வேலைக்குப் போறம். அவர் Factory யிலைதான் வேலை செய்கிறார். அங்கை நல்ல அரசாங்க உத்தியோகத்திலை இருந்தவர் என்று உங்களுக்குத் தெரியும். நான் வீட்டு வாசல்படியைத் தாண்டினது கிடையாது. இங்கை வந்து இந்தக் கொட்டும் பனியிலும் கடுங் குளிரிலும் வேலைக்குப் போறன். ஏன் போறம்? ஆருக்காகப் போறம்? இதைப் பிள்ளைகளும் உணர்ந்து நடக்கவேணும். டான்சு ஆடிறதுக்கும் பாட்டுப் பாடுறதுக்கும் நாங்கள் இங்கை வரயில்லை. உயிரைக் காப்பாத்துவதுக்கு எத்தனையோ நாடு நாடாய்த் திரிந்துதான் இங்கை வந்தம். இங்கை வந்தவுடன் எங்கடை நிலைமையை மறந்து இப்படிக் கும்மாளம் போடச் சொல்லுதோ? இல்லைக் கேட்கிறன், இவ்வித கும்மாளம் தேவை-தானோ?

சச்சி :- எனக்கு நல்லாய் விளங்குது உன்ரை நிலைமை. ஆனால் பிள்ளைகளுக்கும் உங்களைப்போல் எத்தனையோ பிரச்சனைகள் இருக்குது என்பதை நீ மறந்து போனாய்.

பரிமளம் :- என்ன பிரச்சனை அவைக்கு? சாப்பாடு நேரத்துக்கு நேரம் விழுகுது. உடுபிடவையிலை ஒரு குறையுமில்லை. பள்ளியில் படிக்கிறதும் வீட்டை வந்து படிக்கிறதும்தானே, அவையின்ரை வேலை.

சச்சி :- அங்கைதான் நீங்கள் பிழை விடுகிறியள். பிள்ளைகள் வாலிபப் பருவம் அடைகிறபோது எத்தனையோ உடல், உள மாற்றங்களுக்குள்ளாகினை. உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தப் பெரிய கஷ்டப்படுகினை - இங்கைதான் அவைக்கு ஆதரவும் அணைப்பும்தேவை

பரிமளம் :- என்னண்ணை இதெல்லாம் நாங்களும் அனுபவித்து

வளர்ந்த நாங்கள் தானே? நாங்கள் என்ன வானத்தாலை வந்து விழுந்தனாங்கள் என்று நினைக்கிறியளே?

**சச்சி** :- பரிமளம், நீ வாழ்ந்த சூழ்நிலை வேறு, இப்ப உன்ரை பிள்ளைகள் வாழுகின்ற சூழ்நிலை வேறை. உலகம் எவ்வளவோ முன்னேறி விட்டுது.

**பரிமளம்** :- ஓமண்ணை, நீ சொல்லுறது சரிதான். முன்னேற்றம் என்று சொல்லிக்கொண்டு அங்கங்களைக் காட்டிக்கொண்டு பெண் பிள்ளைகள் திரியினம். அதுமாதிரி எங்கடை பிள்ளைகளையும் திரியவிடச் சொல்லுறியளோ? எங்களுக்கும் ஒரு கலாச்சாரம், ஒரு கட்டுக்கோப்பு இருக்குது. மற்றவன் திறந்து விட்டிட்டுத் திரியிறான் என்று நாங்களும் அப்படிச் செய்யலாமோ?

**சச்சி** :- நான் சொன்னதை நீ பிழையாய் விளங்கியிட்டாய். நடை, உடை பாவனையிலை மாற்றம் ஏற்படுவதை நாங்கள் தடுக்க முடியாது, அது காலத்தின் கோலம். ஆனால் நாங்கள் எதுசரி, எதுபிழை என்று நல்லாய் உணர்ந்துதான் நடக்க வேணும். மற்றவன் தலையை மொட்டையடிக்கிறான் அல்லது குரங்கு வெட்டு வெட்டிறான் என்று நாங்களும் வெட்டிறதே.

**பரிமளம்** :- அப்படிச் சொல்லுங்கோ - அதைத்தான் நாங்கள் கண்டிக்கிறம் - அது அவைக்குப் பிடிக்குதில்லை. எங்களைப் பட்டிக்காடுகள் என்றெல்லே நினக்கினை எங்கடை பிள்ளைகள்.

**சச்சி** :- அவை நினைச்சால் நாங்கள் குறைந்தா போவம் அதையெல்லாம் சமாளித்துப் பொறுமையைக் கடைப் பிடிச்சுதான் நாங்கள் பிள்ளைகளைச் சமாளிக்க வேணும்.

பரிமளம் :- அண்ணை, இப்ப பொறுமையைக் கடைப்பிடிக்கிறது நாங்களோ பிள்ளைகளோ?

சச்சி :- இரண்டுபேரும் பொறுமை, சாந்தம், அன்பு ஆதரவாய் இருந்தால்த்தான் இங்கை பிரச்சனைகள் இல்லாமல் சமாளிக்கலாம். இரண்டுபேரும் ஆத்திரப்பட்டு, தேவையில்லாத பேச்சுக்களில் ஈடுபட்டால், எல்லாம் விபரீதமாய்த்தான் முடியும். பிள்ளைகளுக்கு என்ன பிரச்சனை என்று கேட்கிறாய் நீ. ஆத்திரப்படாமல் பேசாமல் இருந்துகேட்க வேணும். தெரிந்ததோ?

பரிமளம் :- சரி, கூப்பிடுங்கோ கேட்பம்.

சச்சி :- பிள்ளை, கோபிகா! கோபிகா! இஞ்சை வா!

கோபிகா :- (வந்து கொண்டே) என்ன மாமா, ஏன் கூப்பிட்டனீங்கள்?

சச்சி :- அதிலை இரு. உனக்குப் பள்ளிக்கூடத்திலைஎன்ன பிரச்சனை என்று சொல்லு கேட்பம். பயப்படாமல் சொல்லு. (இருக்கிறாள்) சொல் அம்மாவும் அறியட்டும்.

கோபிகா :- வந்து - வந்து பல பிரச்சனைகள் இருக்குது

சச்சி :- சரி, முதலிலை முக்கியமானதுகளைச் சொல்லு.

கோபிகா :- முக்கியமென்றால் இந்த ஆங்கிலப் பிரச்சனை. ஆங்கிலம் கஷ்டமாய் இருக்குது. சில பகுதிகள் விளங்குதில்லை. ஆசிரியர்கள் பேசிறதும் அரைகுறையாகத்தான் விளங்குது.

சச்சி :- நீ ESL வகுப்புக்குப் போறனியா?

கோபிகா :- ஓம் போறனான். அங்கையும் விளங்கிக் கொள்ளுறது சில வேளை கஷ்டமாகத்தான் இருக்குது. ஒரு மாஸ்டர் அநேகமாக ஒரு வீடியோவைப் போட்டிட்டுப் பாருங்கோ என்று விடுவார். பிறகு அதைப்பற்றி நாங்கள் கட்டுரை எழுதவேணும்.

சச்சி :- ஓம். அதுவும் ஆங்கிலம் படிக்கிறதுக்கு நல்லதுதானே.

கோபிகா :- ஆனால் ஒவ்வொருநாளும் வீடியோவைப் பார்த்து பார்த்து அலுத்துப் போச்சு.

சச்சி :- ஒன்றும் படிக்காமல் வீடியோவைப் போட்டிட்டு இருக்கிறாரோ?

கோபிகா :- ஓம். அதை எங்கடை பிள்ளைகள் சிலபேர் அவரிட்டைச் சொன்னவை. ஆனால் அவர் அதைப்பற்றிக் கவனிக்கிறதாகத் தெரியவில்லை.

சச்சி :- அப்ப நீங்கள் வைஸ் பிரின்சிபலிட்டைச் சொல்லி-யிருக்கலாமே?

கோபிகா :- ஒருதரும் அப்படிச் செய்யவில்லை. இதனாலை எங்களுக்கு ஏதாவது Punishment கிடைக்கும் என்று ஒருத்தரும் சொல்ல இல்லை.

சச்சி :- அது பிழையான முடிவு. இப்படியான விஷயங்களை நீங்கள் வீட்டை வந்து சொன்னால், அப்பா பள்ளிக்-கூடத்திலை வந்து கதைப்பார்தானே.

கோபிகா :- அப்பா வேலைக்குப் போறவர். அவருக்கு நேரமில்லை. அதுதான் நான் சொல்லவில்லை.

சச்சி :- அது பிழை. அப்பா வேலைக்குப் போனாலும், பிள்ளைகளின்ரை படிப்பு விஷயத்திலை கட்டாயம் அக்கறைஎடுத்திருப்பார். எனக்குத் தெரியும் பரந்தாமனைப்பற்றி. அவர் கட்டாயம் கதைத்திருப்பார்.

பரிமளம் :- பாத்தியளே இவளின்ரை கதையை. விஷயத்தை எங்களுக்குச் சொல்லாமல் தானே முடிவெடுக்கிறது. பள்ளிக்கூடத்திலை நடக்கிற விஷயங்களை எங்களுக்கும் சொன்னால்தானே நாங்களும் எதாவது செய்யலாம்.

சச்சி :- பிள்ளை, கேட்டியே அம்மா சொல்லுறதை. அப்பா வேலைக்குப் போறதென்று இதுகளைக் கதைக்காமல் விடப்படாது.

கோபிகா :- அப்பா வந்து கதைச்சு, அதாலை மாஸ்டர் கோபப்பட்டு எங்களுக்கு ஏதாவது செய்தால், மற்றப்பிள்ளைகள் என்னைத்தான் பேசுவினம், அவையெல்லாம் பேசாமல் இருக்கும் போது, நான் ஏன் சொல்லுவான் என்று நானும் பேசாமல் விட்டிட்டன்.

சச்சி :- இங்கைதான் பிள்ளை நீ பிழை விட்டுட்டாய். இங்கை நேரே மாஸ்டரிட்டையே சொல்லலாம். வகுப்பு முடிந்த பின் தனியாகக் கதைக்கலாம். விஷயத்தை விளங்கப் படுத்தினால் அவர் கட்டாயம் உதவி செய்திருப்பார். நீங்கள் உங்கடை Guidance counsellor ரோடு கதைச்சிருக்கலாமே.

பரிமளம் :- பாருங்கோ, இந்தப் பிள்ளை செய்யிற வேலையை. எங்களிட்டைச் சொல்லியிருக்கலாம். அப்பாநல்லாய் இங்கிலிசு கதைப்பார். அல்லாட்டில் மாஸ்டரோடை கதைச்சிருக்கலாம். பேசாமல் இருந்தால் நாங்கள் என்ன செய்யிறது?

சச்சி :- பாத்தியே பிள்ளை, நீ பயப்படாமல் அம்மாவிட்டைச் சொல்லியிருக்கலாமே.

கோபிகா :- அம்மா என்ன சொன்னாலும் பேசுவா. சொல்லிப் பிரயோசனமில்லை என்று பேசாமல் இருந்திட்டன்.

சச்சி :- இதுதானே பிழை. பொதுவாக எங்கடை குடும்பங்களிலை இருக்கிற பெரிய பிழை Communication இல்லாதது. பெற்றாரும் பிள்ளைகளும் கடைசி ஒரு கிழமையிலை ஒரு நாளைக்கென்றாலும் எல்லா விஷயங்களையும் கதைக்கவேணும். பெற்றார்

வேலையென்று ஓடித்திரியிறது, பிள்ளைகள் வீட்டைவந்து TV பார்க்கிறது அல்லது Telephone இலை கதைக்கிறது. ஆக்கபூர்வமாக ஒன்றும் செய்கிறதில்லை. ஆங்கிலம் கஷ்டமென்றால் புத்தகங்கள் எடுத்து வாசிக்கிறது - ஆரிடமாவது கேட்டுப் படிக்கிறது. இதை விட்டுப்போட்டு வகுப்பிலை ஒன்றும் விளங்காமல் கஷ்டப்படுகிறது கூடாது.

**பரிமளம்** :- நல்லாய் சொன்னியல் அண்ணை. எந்த நேரமும் TVக்கு முன்னாலைதான் இவளின்ரை சீவியம். அதுவும் நல்ல நிகழ்ச்சிகளைப் பார்த்தாலும் பரவாயில்லை. அவங்கள் கண்ட குப்பைகளையெல்லாம் காட்டுவாங்கள். அதைத்தான் பார்க்கிறது. இது பத்தாதென்று எங்கடை படங்களும் இப்ப வீடியோவிலை போட்டுப் பார்க்கிறது. எங்கடை படங்களும் இப்ப மிகவும் மோசம் - என்ன படங்கள் எடுக்கிறாங்கள் இவங்கள்? காதல்தேசம், காதல்கோட்டை - இதுதான் படங்களின்ரை பெயர். இவங்களுக்கு என்னத்தை எடுக்கிறது, என்னத்தைக் காட்டுறதென்று ஒரு பொறுப்பே இல்லாமல் போச்சுது. குழந்தை குட்டிகளை வைச்சுக்கொண்டு படம் பார்க்க ஏலாது.

**சச்சி** :- பொறு பரிமளம், பொரிந்து கொட்டாதை. படம் எடுக்கிறவன் காசு சம்பாதிக்கிறதுக்குத்தான் படம் எடுக்கிறான். கூடாது என்று சனங்கள் ஒதுக்கித் தள்ளினால் அவன் அப்படிப் படங்களை எடுக்கமாட்டான். காதல் என்று போட்ட உடனை சனம் எல்லாம் அள்ளுப்படுகிறது. அவன் நல்லாய் உழைக்கிறான். அப்ப அவனைச் சொல்லிக் குற்றமில்லை.

**பரிமளம்** :- அவங்கடை படம் பாக்க இளசுகளைக் காட்டிலும் கிழடு கட்டைகளுமெல்லே போகுது.

சச்சி :- ஓம். எங்கடை ஆட்களுக்கு வேறை பொழுது போக்கில்லை - இப்படிக் குஞ்சு குருமானை, பால்குடிக்கிற பிள்ளைகளையும் கொண்டல்லே படத்துக்கும் போகுதுகள். பெற்றார் நல்லாய் கவனிக்கவேணும். 3 மணித்தியாலத்துக்கு இப்படிச் சிறு குழந்தைகளைக் கொண்டு போய் தியேட்டரிலை இருந்து படம் பாக்கிறது அதுகளுக்குக்கூடாது. நல்லகாலம் இப்ப தியேடட்டருக்குள் புகைக்கக கூடாதென்று சட்டம் இருக்கிறதாலை தப்பிப் பிழைச்சம். அல்லாட்டில் அதாலை வியாதிகள் வந்து எல்லாரும் கஷ்டப்படவேணும்.

பரிமளம் :- எங்கடை சனத்தைத் திருத்த ஏலாதண்ணை. அதுகள் ஊரிலை இருந்த மாதிரித்தான் இங்கையும் இருக்குதுகள். படிக்காதவைதான் அப்படி என்றால், படிச்ச பெடியளும் அப்படித்தானே நடக்குதுகள்.

சச்சி :- சரி, அதுகளை விட்டுட்டு எங்கடை விஷயங்களுக்கு வருவம் - பிள்ளை வேறை என்ன பிரச்சனை சொல்லு?

கோபிகா :- வந்து இந்தப் பெடியள். அதுதான் எங்கடை பெடியள் விடுகிற சேட்டைகள்

பரிமளம் :- என்ன பெடியள் சேட்டை விடுறாங்களோ?

சச்சி :- பொறு, பொறு. அவளைச் சொல்ல விடன். நீ சொல்லு பிள்ளை.

கோபிகா :- எங்கடை பெடியள் சிலர் வெளியிலை நின்றுகொண்டு பகிடி விடுகிறது. சிலவேளை மோசமான Comment அடிக்கிறது.

சச்சி :- இதை நீங்கள் மாஸ்டரிட்டைச் சொன்னால் என்ன?

கோபிகா :- அவை அதைச் Serious ஆக எடாதேங்கோ பேசாமல் விடுங்கோ என்று சொல்லுவினை.

சச்சி :- அப்ப நீங்கள் என்ன செய்யிறனீங்கள்?

கோபிகா :- நாங்கள் சிலவேளை மற்ற Girls சோடை கதைக்கிறது. அவைக்கும் இதே பிரச்சனைதான். சிலர் தங்கடை Boy friends இட்டைச் சொல்லுவினை. அவை போய் அவங்களோடை கதைக்கிறது. இதனாலை சில வேளை Boys க்கை பிரச்சனைகள் வரும்.

சச்சி :- எங்கடை Girlsசுக்கும் Boy friends என்று இருக்கினையோ?

கோபிகா :- எல்லோருக்குமில்லை - ஒருத்தர் இரண்டு பேருக்குத்தான் இருக்கும்.

சச்சி :- இந்த Boy friends எங்கடை பெடியளோ வேறை இனப் பெடியளோ?

கோபிகா :- அநேகமாக எங்கடை Boys தான். சிலவேளை Guyanese அல்லது Indian boy ஆக இருக்கும்.

பரிமளம் :- நீயும் Boy friends வைச்சிருக்கிறியோ?

கோபிகா :- பாத்தியளே அம்மாவின்ரை கதையை.

சச்சி :- பொறு பரிமளம். அந்தரப்படாதை. இந்த dating என்று மற்ற இனப் பெடியள் திரியிறதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

கோபிகா :- Dating கூடாதுதான். ஆனால் எங்களை மற்றவை பகிடி பண்ணுறது உங்களுக்கு Boy friend இல்லை - நீங்கள் மனிசரில்லையோ உங்களுக்கு Feelings இல்லையோ என்றெல்லாம் பகிடி பண்ணுவினை.

சச்சி :- நீங்கள் அதுக்கு என்ன சொல்லுறது?

கோபிகா :- நாங்கள் சொல்லுறது எங்கடை Culture இலை அப்படி dating எல்லாம் கிடையாது. அது கூடாது - அப்பா

அம்மாவுக்குப் பிடிக்காது என்று சொல்லுவம். அவை அதைக் கேட்டுப்போட்டு You are all stupids. அப்பா அம்மாவே கலியாணங் கட்டிறது? உங்கடை Partnersசை நீங்கள்தானே Select பண்ணவேணும் என்று சொல்லுவினை.

**பரிமளம்** :- அண்ணை கேட்டியளே கதையை? இங்கை பள்ளிக்கூடங்களிலை பெடியள் படிக்க போறதில்லைபோல கிடக்குது. ஆள் பிடிக்கத்தான் போகினையாக்கும்.

**சச்சி** :- பொறு பரிமளம். திடீரென்ற முடிவுக்கு நாங்கள் வரக்கூடாது. வெள்ளையர்களின் வாழ்க்கை முறையிலை கீழ் வகுப்பிலைபடிக்கும் போதே ஒவ்வொருவரும் சோடி சேர்ந்து கொள்ளுவினை. அதைப் பெற்றாரோ ஆசிரியரோ கண்டிக்கிறதில்லை, ஏனென்றால் அவையும் அப்படித்தான் வளர்ந்தவை.

**பரிமளம்** :- அண்ணை, அவை வளர்ந்த விதம் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. ஆனால் எங்கடை வளர்ப்புமுறை வேறை. பஞ்சையும் நெருப்பையும் பக்கத்திலை வைச்சால் பற்றாமல் இருக்குமோ. எனக்குத் தெரியக்கூடியதாய் எத்தனையோ 14, 15 வயதுப் பிள்ளைகள்கூடத் தாயாராகிக் கஷ்டப்படுகுதுகள். எங்கடை பிள்ளைகளுக்கு இதெல்லாம் தேவைதானா?

**சச்சி** :- இங்கைதான் பெற்றார் கூடிய கவனம் எடுக்கவேணும். பாலியல் விடயங்கள் பற்றிப் பள்ளிக்கூடங்களிலை கீழ் வகுப்புக்களிலேயே சொல்லிக் கொடுக்கினை. நாங்களும் பிள்ளைகளோடும் இலேசாக இதுகளைப்பற்றி நாசூக்காகக் கதைக்கவேணும். இது உலக இயல்புதானே?

**பரிமளம்** :- இதென்ன கதையண்ணை கதைக்கிறியள்?

பிள்ளைகளோடை நாங்கள் இதுகளை என்னென்று கதைக்கிறது?

**சச்சி** :- பரிமளம், நீதான் வெட்கப்படுகிறாய். ஆனால் பிள்ளைகள் வெட்கப்படாதுகள். சிலவேளை உயிரியல் வகுப்பிலை, உங்களைக் காட்டிலும் கூடுதலாக இதுகளைப்பற்றி, உங்கடை பிள்ளைகள் அறிந்திருப்பினை.

**கோபிகா** :- ஓம், ஓம். வகுப்பிலையே இதைப்பற்றிச் சொல்லித் தந்தவை.

**சச்சி** :- பாத்தியே, பாத்தியே! நீ தான் இதைப் பற்றி ஏதோ ,புதினமாக கதைக்கிறாய்.

**பரிமளம்** :- அண்ணை, நாங்கள் படிக்கிற காலத்திலை, 10ஆம் வகுப்பிலைதான் விஞ்ஞானப் பாடத்திலை சொல்லித் தந்தவை. அதுவும் உடலுறுப்புக்களைப் பற்றி.

**சச்சி** :- இங்கை எல்லாம் கீழ் வகுப்பிலையே சொன்னால், பிள்ளைகள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிக் கொடுக்கினம்.

**பரிமளம்** :- அதுதான் எல்லாம் தலை கீழாக நடக்குதுகள். இங்கே றோட்டிலை, பஸ்சிலை மனிசர் நடந்து போக ஏலாது.

**சச்சி** :- ஏன்? என்ன பிரச்சனை?

**பரிமளம்** :- வெட்கம்கெட்ட சனம் - பெட்டையளும் பெடியளும் செய்யிற வேலைகளைப் பாக்க எங்களுக்கே வெட்கமாய் இருக்குது.

**சச்சி** :- இது வந்து கலியுகம் அப்படித்தான் நடக்கும். அதுவும் ஒரு செயல்தானே என்று நினைச்சுப்போட்டு நாங்கள் போக வேண்டியதுதான்.

**பரிமளம்** :- எதுக்குமண்ணை ஒரு ஒழுக்கம் என்று இருக்கவேணும்

ஆடு மாடுகள் மாதிரி நாங்கள் பொது இடங்களிலை நடக்கலாமோ? சொல்லுங்கோ பாப்பம்?

சச்சி :- இங்கை பரிமளம், சுதந்திரமென்று சொல்லிக்கொண்டு சனங்கள் தலைகீழாகத்தான் நடக்குதுகள். எங்களுக்கு அதுகளைப் பார்க்கப் பெரிய அந்தரமாகத்தான் இருக்கும். பெண்கள் விரும்பினால் மேலங்கி போடாமல் திரியலாமென்று சட்டமே இடங் கொடுக்கிற இடமிது.

பரிமளம் :- இங்கை இருந்தால் எங்டை சமுதாயம் கெட்டுப்போம். ஊருக்கு திரும்பிப் போனாலென்ன என்று சிலவேளை நான் அவருக்குச் சொல்லுறனான்.

சச்சி :- இது உங்களுக்கு மாத்திரமல்ல, பெரும்பாலான பெற்றாருக்கு ஏற்படுகிற எண்ணம்தான். நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் போக ஏலாது - வந்த இடத்திலை சமாளிக்க வேண்டியதுதான்.

[ பரந்தாமர் வருகிறார் - கோபி உள்ளே போகிறாள். ]

பரந்தாமர் :- ஆர் சச்சியே? என்ன, உம்மைக் காணுறதே பெரிய அபூர்வமாக இருக்குது.

சச்சி :- நல்ல கதையிது. ஆரைக்காணுறது அபூர்வம் என்று தெரியவில்லை. நீங்கள்தானே வேலை, வேலை என்று ஓடித்திரியிறியள் சனி ஞாயிறும் ஓய்வில்லாமல் ஓடித் திரியிறியள்.

பரந்தாமர் :- என்ன செய்யிறது? இங்கை எதுக்கும் காசு - காசில்லாமல் ஒன்றும் செய்ய ஏலாது. வரயிக்கை என்ன வங்கியிலை போட்டிட்டே வந்தனாங்கள்? வாங்கின கடன் கொடுக்கப் பிறம்பாக உழைக்கவேணும்.

இதற்கிடையிலை அங்கை ஊரிலை உள்ள சனம் அண்ணை காசனுப்பு, மச்சான் காசனுப்பு, தம்பி காசனுப்பென்றால், நான் என்ன மரத்திலையே பிடிங்கி அனுப்புறது?

சச்சி :- எனக்கு விளங்குது. எல்லோருக்கும் இதே நிலைதான். புதிதாக ஓரிடத்திலை குடும்பம் துவங்கிறதென்றால் கஷ்டம்தான். அதற்கிடையில் அங்கை உள்ளதுகளும் பாவங்கள்தான் - அதுகள் நீங்கள் நல்ல வசதியாய் இருக்கிறியள் என்று நினைத்துக் காசனுப்பச் சொல்லிக் கேட்குதுகள். அதுகளைக் குற்றஞ் சொல்லிப் பிரயோசனமில்லை.

பரிமளம் :- இரண்டு பேரும் கதையுங்கோ, நான் கோப்பி போட்டுக்கொண்டு வாறன்.

சச்சி :- பரிமளம், எனக்குச் சீனி குறைச்சுப்போடு.

பரிமளம் :- ஏனன்ணை உங்களுக்குச் Sugar ஓ

சச்சி :- இல்லை. இப்பவே கவனமாய் இருந்தால் நல்லதுதானே.

பரந்தாமர் :- வருமுன் காக்கிறவர். நல்லது, எப்படிக் கவனமாய் இருந்தாலும் வாற நோயைத் தடுக்க ஏலாது. சரி, அது கிடக்கட்டும் எப்படி உன்பாடு வேலை எல்லாம் ஒழுங்கோ?

சச்சி :- இங்கை நிரந்தரம் என்று ஒன்றையும் சொல்ல ஏலாது தானே - ஒரு மாதிரி இழுத்துக்கொண்டு போறன். எப்ப நிப்பாட்டுறானோ தெரியாது. அது கிடக்கட்டும், நீங்கள் வேலை, வேலையென்று ஓடித் திரியிறியள். இந்தப் பிள்ளைகளின்ரை அலுவல்களைக் கவனிக்கிற தில்லையோ.

பரந்தாமர் :- ஏன் பரிமளம்தானே கவனிக்கிறா. நான் அவவின்ரை

பொறுப்பிலையே பொடியள் இரண்டு பேரையும் விட்டிட்டன்.

**சச்சி** :- நீங்களும் இடைக்கிடை அவையோடை கதைச்சு, அவையின்ரை விஷயங்களையும் கவனிக்க வேணும்.

**பரந்தாமர்** :- ஓமப்பா, ஆனால் எங்கை நேரம். வேலையாலை வந்து விழுந்து படுக்கத்தான் சரி.

**சச்சி** :- நீங்கள் இப்படி விழுந்து விழுந்து உழைக்கிறது ஆருக்காக?

**பரந்தாமர்** :- என்னகேள்வி - பிள்ளைகளை முன்னேற்றுவதற்குத்தான்.

**சச்சி** :- அங்கைதானே பிழை விடுகிறியள். ஆருக்காக நீங்கள் உழைக்கிறியளோ அவை திசைமாறிப் போகினம். அன்பு, ஆதரவு, வழிகாட்டல் இல்லாமல் பிள்ளைகள் கெட்ட வழிகளிலை போகப்போகுதுகள்.

**பரந்தாமர்** :- என்ன சச்சி பயப்படுத்திறாய்? என்ரை பிள்ளைகள் அப்படிச் செய்யாதுகள்.

**சச்சி** :- நான் உங்களைப் பயப்படுத்தவில்லை. ஆனால் இன்றைக்குக் கோபிகாவும் தாயும் வாக்குவாதப் பட்டதைப் பார்த்தால், பிரச்சனை இருக்குது என்றுதான் நான் நினைக்கிறன்.

[ பரிமளம் கோப்பியோடு வருகிறாள். ]

**பரந்தாமர்** :- என்ன பரிமளம், கோபிகாவோடை என்ன பிரச்சனை?

**பரிமளம்** :- முதலிலை இந்தக் கோப்பியைக் குடியுங்கோ களைதீர பிறகு பேசுவம்.

**பரந்தாமர்** :- நான் குடிக்கிறன், நீ சொல்லு.

பரிமளம் :- என்ன வழக்கமான வாக்குவாதம்தான். அவள் இப்ப கனடா வந்தபிறகு எங்களுக்குப் படிப்பிக்கப் பார்க்கிறாள்.

சச்சி :- இங்கைதான் இரண்டு பேரும் பிழை விடுகிறியள். பிள்ளைகளின்ரை மனோநிலையையும் பிரச்சனைகளையும் நீங்கள் அறியாமல் திடீரென்ற முடிவுக்கு வாறதுதான் பிழை.

பரந்தாமர் :- என்ன சச்சி, அவைக்கென்ன பிரச்சனை இங்கை.

சச்சி :- இதே கேள்வியைத்தான் உங்கடை மனைவியும் கேட்டவ. நான் கோபிகாவைக் கூப்பிட்டுக் கேட்டபிறகு தான் அவவுக்கும் விளங்குது, அவளின்ரை பிரச்சனைகள் - நீங்கள் இப்படிப் பிள்ளைகளோடு பாய்ந்து விழுந்தால் அதுகள் யாரையாவது நண்பர்களைத் தேடித்தான் ஆறுதல் பெறவேண்டியிருக்கும். எனவே விஷயத்தையும் கதைச்சுத் தீர்க்கிற வழியைப் பாருங்கோ.

[கோபால் வருகிறான்.]

கோபால் :- Hi Uncle How are you?

சச்சி :- ஆர் கோபாலே வா, வா! ஆளே மாறிப்போனாய். இதென்ன தம்பி தலை வெட்டு? - உன்ரை கோலம்?

கோபால் :- இதுதான் Uncle - present trend -

சச்சி :- இது trend சரி தம்பி - பார்த்தால் ஏதோ கூத்துக்கு வேஷம் போட்ட கோமாளி மாதிரி இருக்கு. ஊரிலை இருக்கும்போது இப்படியே இருந்தனி.

பரிமளம் :- நல்லாய் கேளுங்கோ - நீங்கள் தான் இவையை திருத்த

வேணும். நாங்கள் சொன்னால், உங்களுக்கு ஒன்றும் தெரியாது பேசாமல் இருங்கோ என்று சொல்லுவினை.

**சச்சி** :- நீங்கள் இவையைத் திருத்துகிறதில்லையோ.

**பரந்தாமர்** :- திருத்துகிறதோ - இடைக்கிடை சொல்லுறதுதான் ஆனால் அவன் இந்தக் காதாலை கேட்டு அந்தக் காதாலை விட்டுவிடுவான்... உனக்குத் தெரியும்தானே இங்கை பிள்ளைகளிலை கை வைக்க ஏலாது. இறுக்கிப் பேசினால் வீட்டை விட்டிட்டு ஓடுதுகள் - அப்ப நாங்கள் என்ன செய்யிறது சொல்லு பாப்பம்?

**சச்சி** :- படிச்ச நீங்களே இப்படிச் சொன்னால், படிக்காத பெற்றார் என்ன செய்யிறது. பிள்ளைகளை அடிக்காமல் திருத்துகின்ற வழிகள் எத்தனையோ இருக்கு.

**பரந்தாமர்** :- சரி அப்ப அதுகளைச் சொல்லு பார்ப்பம்.

**சச்சி** :- அத்தான், உங்களுக்கு விளங்கும், தோளுக்கு மிஞ்சினவன் தோழன் என்று உங்கடை பிள்ளைகள் எதுசரி எது பிழை என்று முடிவெடுக்கிறதிலை, நீங்களும் உதவி செய்யவேணும். பொறுங்கோவாறன். தம்பி கோபால்? நீ ஏன் இப்படித் தலைவெட்டோடும் Baggy Pants தோடெல்லாம் போட்டுக் கொண்டு திரிகிறாய்?

**கோபால்** :- Uncle இப்படி நாங்கள் போடாட்டில் மற்றப் பெடியள் எங்களை மதியாங்கள். நான் வந்த காலத்திலை எவ்வளவு கஷ்டப்பட்டனான் என்று உங்களுக்குத் தெரியுமா?

**சச்சி** :- என்ன கஷ்டப்பட்டனி?

**கோபால்** :- எங்கடை பெடியளே என்னைப் பகிடிபண்ணத் தொடங்கி விட்டாங்கள். டேய் உன்னைப் பாத்தால் ஒரு காட்டான்மாதிரிக் கிடக்குது. இங்கை வந்தால்

நாங்களும் மற்றவர்களைப் போல உடுத்தால்தான் அவங்கள் எங்களை மதிப்பாங்கள் - என்று சொல்லி அவங்கள்தான் இப்படி மாத்தினது.

**சச்சி** :- மற்றவன் சொல்லுறான் என்றதற்காக நீ அப்படிச் செய்கிறதே? நல்லாய் யோசிச்சு எங்கடை கலாச்சாரம், எங்கடை நடை, உடை, பாவனை என்று இருக்குத் தானே.

**கோபால்** :- Uncle நீங்கள் சொல்லுவியள் - நீங்களும் என்னுடைய position இலை இருந்தால் இப்படித்தான் சொல்லுவியள். நான் அவங்கள் சொல்லுகிறபடி செய்யாட்டில் என்னைச் சேர்க்க மாட்டாங்கள். மற்ற இனப் பெடியள் எல்லாம் பகிடிபண்ணுவாங்கள். உங்களுக்குத் தெரியும்தானே When you are in Rome, behave like Romans என்று சொல்லுறதை.

**பரிமளம்** :- கேட்டியளே அண்ணை கதையை. அதுகளோடை நாங்கள் ஒன்றும் கதைக்க ஏலாது. இப்படித்தான் என்னோடையும் எடுத்தெறிஞ்சு பேசுதுகள்.

**சச்சி** :- பொறு பரிமளம். நாங்களும் அவையின்ரை நியாயங்களைக் கேட்கத்தானே வேணும். தம்பி நாங்கள் தமிழர்கள். எங்களுக்கென்று ஒரு கலை, கலாச்சாரம் இருக்குது அதைப் பேணிப் பாதுகாக்கத்தானே வேணும்?

**கோபால்** :- ஓம். அதைப் பாதுகாக்கத்தான் வேணும். அதை வீட்டிலை செய்வம். ஆனால் பள்ளிக்கூடத்திலை பல இனப் பிள்ளைகள் படிக்கிற இடத்திலை majority யோடைதான் நாங்கள் ஒத்துப் போகவேணும். இதனாலை பிரச்சனைகள் இல்லை. நான் எங்கடை கலாச்சாரம் என்று சொல்லி வேட்டியும் சால்வையும் உடுத்திக் கொண்டு போனால் எல்லாரும் ஏதோ Alien வந்திறங்கிவிட்டானாக்கும் என்றுதான் பாப்பினை.

சச்சி :- தம்பி, இப்ப நாங்கள் இருக்கிறம் - அதாவது அப்பாவும் நானும் உன்னைப் போல மாறிவிட்டமோ. இல்லை. எங்களைப்போல நீயும் Pants உம் Shirt உம் போட்டுக் கொண்டு போகலாம்தானே உன்னை ஒருத்தரும் வேட்டியோடை பள்ளிக்குப் போகச் சொல்லவில்லையே.

கோபால் :- Uncle! உங்களுக்குச் சொல்லி விளங்கப்படுத்த ஏலாது. எங்கடை நிலையிலை நீங்கள் இருந்தாலும், நாங்கள் உடுக்கின்ற மாதிரித்தான் நீங்கள் உடுத்திருப்பியள்.

சச்சி :- அது பிழையான நியாயம். இப்ப என்னுடைய மகன் மோகனைப் பார், உன்னைப்போலவே உடுக்கிறான்? இல்லையே! அவன் இங்கை கனடாவுக்கு வந்து 8 வருஷம் - 5ஆம் வகுப்பிலை இருந்து இங்கை படிக்கிறான். அவன் உன்னைப்போலமாறவில்லை. வகுப்பிலை கெட்டிக்காரன். Teachers எல்லாம் அவனைப்பற்றிப் புகழ்கிறார்கள். அவன் கல்லூரியிலை Prefect ஆக இருக்கிறான். அவனை ஒருத்தரும் பகிடி பண்ணயில்லை. அதற்கென்ன மறுமொழி சொல்லப் போகிறாய்.

கோபால் :- Uncle உங்களுக்குத் தெரியாமல் இருக்கும் அவரையும் பகிடி பண்ணியிருப்பாங்கள்.

சச்சி :- பாடசாலையில் நடக்கிற விஷயங்களெல்லாம் எங்களுக்குச் சொல்லுறவன். ஆரம்பத்திலை உனக்கு ஏற்பட்ட நிலைதான் அவனுக்கும் இருந்தது. அவன் அவர்களுக்கு விளங்கப்படுத்தி மாற மறுத்துவிட்டான். இப்ப அவைகள் அவனைக் கண்டால் மரியாதை. எதையும் எதிர் நீச்சல் போடுவதற்கு மனத்தைரியமும் விடா முயற்சியும் தேவை. மற்றவன் சொல்லறான் என்று நாங்கள் செய்ய வெளிக்கிட்டால் கழுதை காவியவன் கதையாய்த்தான் முடியும்.

**பரந்தாமர்** :- கேட்டுதே Uncle சொல்லுறது? அவற்றை மகன் மாதிரி நீ ஏன் இருக்கப்படாது? இந்த நாட்டிலை எங்கடை கலாச்சாரத்தை வளர்க்கிறதற்கு அரசாங்கமே உற்சாகப்படுத்துது. எங்கடை முகவரியை நாங்கள் பாதுகாத்துக்கொள்ள வேணும். தமிழன் வரலாற்றுப் புகழ் மிக்கவன் என்பதை மற்றைய இனங்களுக்கு எடுத்துக் காட்ட வேணும்.

**கோபால்** :- Uncle அதென்ன கழுதை காவின கதை?

**சச்சி** :- இது ஈசோப்பின் கதைகளில் ஒன்று. ஈசோப்பைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பியே.

**கோபால்** :- எங்கினையோ படிச்சனான்.

**சச்சி** :- தெரியாவிட்டால் - Library இலை போய்ப்பார்.

**கோபால்** :- ஏன் C.D. இலை இருக்குமே.

**சச்சி** :- ஓ,சிலவேளை கதை இருக்குதோ என்னவோ தெரியாது, தேடிப்பார்.

**பரந்தாமர்** :- நாங்கள் படிச்ச நாட்களிலை ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் எவ்வளவு மரியாதை கொடுத்து நடந்தம். வாத்தியாரிட்டை வாங்கின அடிகள் இன்னமும் நினைவிருக்குது. இப்ப எல்லாம் தலைகீழாக மாறிப்போச்சு.

**கோபால்** :- அப்பா, நீங்கள் படிச்ச காலத்திலை, அவை உங்களை அடிமைகள் மாதிரித்தான் நடத்தினவையாக்கும். இப்போது உலகம் முன்னேறிவிட்டது. நாங்களும் அதற்கேற்றபடி முன்னேறாவிட்டால் மற்றவன் முந்திக் கொண்டு போய் விடுவான்.

**சச்சி** :- தம்பி, நான் உன்ரை பேச்சுக்கு மதிப்புக் கொடுக்கிறன் நாங்கள் முன்னேற வேண்டுமென்பதை நானும்

ஆமோதிக்கிறன். ஆனால் முன்னேற்றம் என்றால் நடை, உடை, பாவனையிலை மட்டும்தான் என்று நினைக்கிற உங்களைப் பார்த்துப் பரிதாபப்படுகிறன். எங்களுடைய கல்வியிலை, ஒழுக்கத்திலை, பிறரோடு புழங்குகிற விதத்திலை முன்னேற்றங் காட்டவேணும். முன்னேற்றமென்று சொல்லிப்போட்டு பிழையான வழிகளிலை காசு சம்பாதிக்கப் பார்க்கிறதும், தேவையில்லாமல் சண்டை சச்சரவுகளிலை ஈடுபடுகிறதும் முன்னேற்றம் என்று, உங்களில் பலபேர் நினைக்கினம்.

கோபால் :- Uncle, நீங்கள் எங்கை குத்துறியள் என்று எனக்கு விளங்குது. எங்கடை பள்ளிக்கூடங்களிலை நடக்கிற விஷயங்களைக் கேட்டியளென்றால்தான் உங்களுக்கு உண்மைகள் விளங்கும்.

பரந்தாமர் :- கேள் சச்சி, வடிவாய்க்கேள். அவன் சொல்லுறதை, இதுகளைக் கேட்க எனக்கு நேரமில்லை. நான் வேலை அலுப்பாலை வந்திருக்கிறன், நான் போய்க் குளிக்கப்போறன்.

சச்சி :- பொறுங்கோ. எனக்கும் விளங்கும் உங்கடை அலுப்பு. ஆனால் இதை நல்லாக விளங்கிக் கொள்ளவேணும். நீங்கள் பிள்ளைகளுக்கு இருக்கிற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பெற்றார்தான் முதலிலை முன்வரவேணும். நீங்கள் இரண்டு பேரும் வேலை வேலையென்று திரியிறது. அவைகள் இரண்டு பேரும் தங்கடை பிரச்சனைகளைத் தீர்க்க ஏலாமல் நண்பர்களை நாடிப்போறது. அவங்கள் தங்களுக்குத் தெரிந்த வழிகளைச் சொல்லிக் கொடுக்கிறது. இதனாலைதான் எங்கடை வருங்காலச் சந்ததி வழிமாறிப் போகுது. இருங்கோ கொஞ்ச நேரம்.

**கோபால்** :- நீங்கள்தான் Uncle எங்களை நல்லாய் விளங்கி-யிருக்கிறியள். பள்ளிக்கூடப் பிரச்சனைகளை வீட்டிலை கதைக்க ஏலாது. கதைக்கவும் ஒருவருமில்லை. அப்ப நான் friends ஓடைதான் கதைக்கிறது. அவங்களுக்கும் எங்களைப்போல பிரச்சனைகள் ஏராளம். ஏதோ எங்களுக்குத் தெரிந்த முறையிலை problems சை solve பண்ணிக் கொண்டு வாறம்.

**சச்சி** :- அத்தான், கேட்டியளே? இதுதான் இன்றைய நிலை. தம்பி நீங்கள் உங்கடை யோசனைக்குத் தகுந்தபடி செய்யிறது சிலவேளை பாரதூரமான விளைவுகளை எங்கள் எல்லாருக்கும் ஏற்படுத்தும் என்பது உங்களுக்கு விளங்கிச்சுதா?

**கோபால்** :- Uncle, எங்களுக்கு முதலிலை எங்கடை பிரச்சனையை solve பண்ணுறதுதான் முக்கியம். அதாலை வாற பிரச்சனையைப் பேந்து பாப்பம். இங்கை குட்டக் குட்டக் குனியக் கூடாது. நாங்களும் குட்டினால்தான் மற்றவன் எங்களோடை தனகமாட்டான். பேசாமல் இருந்தியளென்றால், எல்லாரும் எங்கடை தலையிலை மிளகாய் அரைக்கப் பாப்பான். அதுதான் நாங்கள் alert ஆக இருக்கவேணும்.

**பரந்தாமர்** :- டேய், இதென்ன கதை? படிக்கிற பிள்ளையின் கதையா இது. ஏதோ கடைப்பிளி, காவாலிகள். கதைக்கிற மாதிரிக் கதைக்கிறாய்.

**பரிமளம்** :- கேட்டீங்களே சச்சி அண்ணை? இவனை நாங்கள் கூட்டிக்கொண்டு வரயிக்கை எப்படிப் பதுங்கிப் பதுங்கி இருந்தான். பாத்தியளே?

**கோபால்** :- அப்பாவும், அம்மாவும் ஊரிலை இருந்து மாதிரி எங்களை இங்கையும் அடங்கி, ஒடுங்கி இருக்கச் சொல்லுகினம். இவையாலைதான் அங்கை அவர்களும் இவையின்ரை

தலையிலை அப்ப மிளகாய் அரைச்சவை. இப்ப நல்லாய் எங்களைப்பற்றி விளங்குது. நாங்கள் எங்கை இருந்தாலும் எங்கடை பிடியை விடப்படாது Uncle. அதுதான் என்ரை கொள்கை.

**சச்சி** :- தம்பி, கோபால்! உன்ரை பேச்சு நல்லாய்த்தான் இருக்குது. உன்ரை கொள்கையும் நல்லது. ஆனால் நீங்கள் எல்லாரும் கொண்டு நடத்திற முறைதான் பிழை. வன்முறையாலை அதுதான் violence ஆலை ஒன்றையுமே சாதிக்க முடியாது. சாத்வீகத்தாலை, அன்பாலை, அஹிம்சையாலைதான் முடியும் என்பதை நல்லாய் விளங்கிக்கொள். நீ குட்டினால் மற்றவனும் குட்டுவான். இதாலை இரண்டு பேரும் குட்டப் படுகிறது மாத்திரமில்லை, சமுதாயங்களே குட்டுப்படும். பிறகு இது பெரிய போராட்டமாக மாறிவிடும். அது தான் எதையும் ஆற அமர யோசித்துச் செய்யவேணும்.

**கோபால்** :- Uncle, நீங்கள் வந்து பழைய பரம்பரை. உங்களுக்கு என்ன சொன்னாலும் விளங்காது. நங்கள் இப்படித்தான் செய்யவேணுமென்று செய்யிறம். நீங்களும் உங்களுக்கு விளங்கின மாதிரிச் செய்யுங்கோவன்.

**பரந்தாமர்** :- கேட்டியா சச்சி கதையை? இந்த நாளையப் பெடியளோடு கதைக்க ஏலாது. எல்லாம் தங்களுக் குத்தான் தெரியுமென்று கதைப்பினை. பிறகு கம்பி எண்ணைக்கை தான் ஞானம் பிறக்கும்.

**சச்சி** :- நாங்கள் அப்படிச் சொல்லிக்கொண்டு தள்ளிப் போனால் பிறகு எங்கடை இளஞ் சந்ததிக்கு ஆர் உதவி செய்கிறது? நாங்கள்தானே அவையை வழி நடத்த வேணும்?

**பரந்தாமர்** :- நீசொல்லுறது, சொல்வழி கேட்கிற பிள்ளைகளுக்குத் தான் பொருந்தும். எருமை மாட்டுக்குமேலை மழை

பெய்தமாதிரி சொல்லுறதைக் கேளாதவையை என்ன செய்யிறது சொல்லு?

**கோபால்** :- Uncle, நாங்கள் கதைக்கிறதாலை பிரயோசனமில்லை. ஏனென்றால் நாங்கள் வளர்கிற சூழலை உங்களுக்கு விளங்கப்படுத்தினாலும் விளங்காது. அது அனுபவித்தால் தான் நாங்கள் செய்யிறது பிழையோ, சரியோ என்று உங்களுக்கு விளங்கும்.

**சச்சி** :- உங்கடை பிரச்சனைகள் எனக்கு நல்லாய் விளங்கும். ஆனால் நீங்கள் வன்முறையை விட்டு வேறு வழிகளிலை பிரச்சனைகளைத் தீர்க்கிறதுதான் நல்லது.

**கோபால்** :- நீங்கள் சொல்லுறது எனக்கும் விளங்குது. ஆனால் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் வன்முறைக்கு ஆதரவாய் இருக்கிறதாலை தான், எங்களில் சிலர் அவ்வாறு செய்யிறம்.

**சச்சி** :- அதாலை எங்கடை சமுதாயத்துக்குக் கெட்ட பெயர் வருகிறதை நீங்கள் யோசிக்கிறியள் இல்லையே.

**கோபால்** :- சமுதாயம், சமுதாயம் என்று அடிக்கடி சொல்லுறியள் - எங்கடை பிரச்சனையைச் சொன்னால் சமுதாயம் தீர்த்து வைக்குமா?

**சச்சி** :- கட்டாயம் தீர்த்து வைக்கும் - நீங்கள் அதற்கு சந்தர்ப்பம் கொடுக்கவேணும்.

**கோபால்** :- நாங்கள் சந்தர்ப்பங் கொடுக்கப்போனால், எங்களுக்குத்தான் ஆபத்து ஏற்படும். எங்களுக்கு அடிவிழுந்த பிறகுதான் சமுதாயம் காப்பாற்ற ஓடி வரக்கூடும். அதுதான் நாங்களே எங்களைக் காப்பாற்றிக் கொள்கிறோம்.

**சச்சி** :- அது பிழையான நியாயம் - எதுக்கும் ஒரு வழிமுறை ஒன்று இருக்குந்தானே.

**பரிமளம்** :- டேய் தம்பி, ஒரு படிச்சவர், அனுபமுள்ளவர் சொல்லுறதைக் கேட்காமல், ஏதோ விதண்டவாதம் கதைச்சுக் கொண்டிருக்கிறாய். நீ கெட்டுப்போகிற வழியிலைதான் போய்க் கொண்டிருக்கிறாய் போலை தெரியுது.

**சச்சி** :- பொறு பரிமளம் - அவன் சொல்லறதையும் நாங்கள் நல்லாய் ஆராய்ந்து பார்க்கவேணும். திடீரென்று முடிவுக்கு வர ஏலாது. சரி - கோபால் என்னை ஒருக்கால் உன்னுடைய சிநேகிதர்களோடை கதைக்கிறதுக்கு ஒழுங்கு செய்யிறியோ.

**கோபால்** :- நீங்கள் அவையோடை கதைக்கிறதாலை, நன்மை ஒன்றும் ஏற்படாது என்றுதான் நினைக்கிறன்.

**சச்சி** :- எந்த விஷயத்தையும் நாங்கள் முயற்சி செய்யாமல் முடிவெடுக்கப்படாது. நான் அவர்களோடு கதைத்தால் அவையின்ரை நிலைமை நல்லாய் விளங்கும். அவைக்கு ஏதோ பிரச்சனை இருக்கிற படியால்தான், அவர்கள் இப்படி நடந்து கொள்கிறார்கள் போல் இருக்கிறது.

**கோபால்** :- அப்படியென்றால் நான் அவையோடை கதைத்துப் பார்க்கிறன் என்றாலும் அதாலை நன்மை ஏற்படுமென்று எனக்கு நம்பிக்கை இல்லை.

**சச்சி** :- அதைப் பற்றிப் பரவாயில்லை. எதற்கும் முயற்சி திருவினையாக்கும் என்றெல்லோ சொல்லுகினம், முயன்று பார்ப்பம்.

**பரந்தாமர்** :- நீ தேவையில்லாமல் தலையிடியை விலைக்கு வாங்கிறாய் போலை கிடக்குது.

**சச்சி** :- உங்களுக்கு இது இப்படித்தான் தெரியும். ஆனால் நாங்களும் எங்கடை சமுதாய முன்னேற்றத்துக்காக ஏதாவது பங்களிப்பைச் செய்யத்தான் வேண்டும்

மகாத்மா காந்தி, மாட்டின் லூதர் கிங், சேர் பொன்னம்பலம் இராமனாதன் போன்றவர்கள் மக்களுக்காகவும், நாட்டுக்காகவும் எத்தனையோ தியாகங்களைச் செய்தார்கள். நாங்கள் அவர்கள் செய்ததிலை ஒரு வீதமாவது செய்யாவிட்டால், நாங்கள் மனிதர்களாகப் பிறந்த பயனில்லை. புதிய நாட்டில் புதியசூழல், புதிய பிரச்சனை உருவாக்கும். அவற்றைச் சமாளிப்பது பலருக்குப் பிரச்சனையாய் இருக்கும்.

**பரிமளம்** :- சச்சி அண்ணை வந்த இடத்திலை மற்றச் சமூகங்களுக்குத் தலையிடி கொடுக்காமல் இருந்தால்தான், எங்களையும் நிம்மதியாக மற்றவை இருக்க விடுவினம். நாங்கள் பிறந்த நாட்டிலை நிம்மதியாய் இருக்க முடியாமல் தான் இங்கை ஓடிவந்தம். வந்த இடத்திலை பிரச்சனை இல்லாமல் இருக்கிறதைத்தான் எல்லாரும் விரும்புவினம். எங்கடை பிள்ளைகள் அப்படி நடக்கிறதைப் பார்த்தால் ஏன் வந்தோமென்று வந்திட்டுது.

**சச்சி** :- பரிமளம், இப்படித்தான் எல்லாரும் அங்கலாய்ப்பாய் பேசுறது ஒருவரும் பிரச்சனைகளை ஆராய முற்படுகிறதில்லை - எல்லோரும் இதிலை ஈடுபட்டு உழைத்தால்தான் இதற்கொரு முடிவு கட்டலாம்.

**பரந்தாமர்** :- சச்சி நீ செய்யிற முயற்சிகள் நல்லதுதான். ஆனால் அதற்குப் பெடியளும் ஒத்துழைக்கவேணும். குதிரைக்குத் தண்ணி இருக்கிற இடத்தைக் காட்டலாம். குதிரைதான் தண்ணி குடிக்க வேணும்.

**பரிமளம்** :- சரி நீங்கள் கதைத்துக் கொண்டிருங்கோ நான் வாறன்

(வீட்டுக்குள் போகிறாள்)

**சச்சி** : நீங்கள் சொல்லுறது எனக்கு விளங்குது. ஆனால் நல்ல தண்ணி இருக்கிற இடத்துக்குக் குதிரையைக்

கூட்டிக் கொண்டு போறது எங்கடை முக்கியமான கடமை. பிள்ளைகளை வழி நடத்துவது பொற்றோருடைய முக்கிய கடமை. வேலையும் எங்களுக்கு முக்கியந்தான். அதுக்காக ஓய்வில்லாமல் இரண்டு மூன்று வேலை என்று ஓடி ஓடித் திரிஞ்சு, உடம்பையும் பிள்ளைகளையும் கவனிக்காமல் திரிகிறது கூடாது. இப்படிச் செய்யிறதாலை உங்களுக்கும் கெடுதல் பிள்ளைகளும் வழி தவறிப் போகக் கூடும்.

**பரந்தாமர்** :- சச்சி நீ தத்துவம் பேசிறாய். நாங்கள் இந்த நாட்டுக்கு வரயிக்கை வங்கியிலை காசு போட்டிட்டு வரயில்லை. இங்கை எல்லாத்துக்கும் காசுதான் கடவுள், உழைச்சால் தான் உருப்படியாய் சீவியம் நடத்தலாம். (இந்நேரம் பரிமளம் பதறியடித்துக் கொண்டு வருகிறாள்)

**பரிமளம்** :- இஞ்சை பாருங்கோ இந்தப் பெட்டை செய்த வேலையை...

**பரந்தாமர்** :- என்ன - என்ன விஷயமப்பா - விளக்கமாகச் சொல்லன்-

**பரிமளம்** :- இவள் கோபிகா காயிதம் எழுதியிருக்கிறதைப் பாருங்கோ

**சச்சி** :- என்ன எழுதியிருக்கிறாள்.

**பரிமளம்** :- எனக்கு இந்த வீட்டிலை நிம்மதியாய் இருக்க ஏலாமல் இருக்குது. எதுக்கெடுத்தாலும் பேச்சும், அடியும் தான். நான் எங்கையாவது போகிறன். என்னைத் தேட வேண்டாம். கோபிகா - பாத்தியளே போட்டாள். (மயங்கி விழுகிறாள்)

-திரை-

# கனடாவில் காமாசாஸ்திரி

## (நாடகம்)

(துறையூரான்)

<u>பாத்திரங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | காமாசாஸ்திரி | | |
| 2. | கமலாம்பாள் | - | அவரதுமனைவி |
| 3. | திலகர் | - | கனடா நண்பர் |
| 4. | சரோஜா | - | அவரது மனைவி |
| 5. | குமார் | - | பத்திரிகை நிருபர் |

**(திலகர் வீட்டில் காமாசாஸ்திரி தங்கியிருக்கின்றார். காலை மணி 9)**

காமா :- ஏன்டி கமலம் யாருமே எழுந்திருக்கலைப் போல நீயாவது ஏதாவது காப்பி கீப்பி போடேன். வயிறு குடையுதடீ.

கமலா :- சத்தம் போட்டு பேசாதீங்கோ அவா காதிலை விழப்போறது.

காமா :- ஏன்டி பயப்படுறே. நான் என்ன காப்பிதானே கேட்டேன். நீ போய் போட்டுக்கிட்டு வாயேன்.

கமலா :- நான் போய் என்ன பண்ணுறது ஏதோ மெஸினிலை எல்லாம் போடுறா. எனக்கு அது ஒண்ணுமே தெரியாதே. எப்படிப் பண்ணுறது.

காமா :- நீ சுத்த அசடா இருக்கியே. நாம கனடா வந்து அஞ்சு நாளாச்சு. இதையெல்லாம் பாத்து வைக்கப்படாதோ என்ன?

கமலா :- தினம் தினம் காலையிலை எழுந்து நமக்கெல்லாம் காப்பி பண்ணிக்கொடுத்தா. நான் சமையல் கட்டை பார்க்கலை. இப்ப போய்க் காப்பி போடுன்னா. நான் என்னான்னு பண்ணுறது.

காமா :- இன்னைக்கு என்ன ஸ்ரைக்கு பண்ணிட்டாங்களோ என்னமோ. இன்னிக்கு என்ன கிழமையடி.

கமலா :- இன்னிக்கு என்ன கிழமை? நாம புறப்பட்டது திங்கட்கிழமை. இன்னிக்கு

காமா :- என்னடி, நாள் கோள் கூடத்தெரியாம திணறிக் கிட்டிருக்கே நேத்தைக்குத்தானே வெள்ளியின்னுட்டுக் கோயிலுக்கு அழைச்சுண்டு போனா. அதைக்கூட மறந்துட்டியா. சுத்த அசடா இருக்கியே நீ.

கமலா :- நீங்க மட்டும் என்னவாம். நீங்களும் நாள் தெரியாமத் தானே என்னைக்கேட்டேள்.

காமா :- சரிதான் எனக்குப்புரியறது இன்னிக்கு சற்றர்டே ஹொலிடே. எல்லோருமே தூங்குறங்கபோல.

கமலா :- நன்னாக் கண்டுபிடிச்சேள் இப்போ மணி என்னாச்சு?

காமா :- அதோ பார் சுவரிலை மாட்டியிருக்கே. 9 மணிக்குமேல ஆச்சுடி.

கமலா :- ஏன்னா. இப்போ நம்ம ஊரிலை எத்தனை மணியிருக்கும்?

காமா :- ஏதோ பத்தோ பத்தரையோ அவர்ஸ் வித்தியாசம்னாப் பாரேன்.

கமலா :- ரொம்ப நேரமாயிருக்குமோ இல்லியோ.

காமா :- என்னடி ரென் அவர்ஸ் வித்தியாசம்னாப்பாரேன். அங்கை இப்ப நடு ஜாமமோ என்னமோ.

(திலகர் மேல் வீட்டிலிருந்து இறங்கி வருகிறார்)

திலகர் :- சொறி, சாத்திரியார் இன்டைக்கு சற்றர்டேதானே எல்லாரும் நித்திரை. நீங்கள் வெள்ளென எழும்பிட்டியளே?

காமா :- என்ன நேரத்தோட எழும்பிட்டியளோ என்று கேட்கிறேளா?

கமலா :- நாமெல்லாம் காலையிலேயே எழுந்திடுவோம். இவாளெல்லாம் குளிச்சுப்பூஜை கூட பண்ணிட்டா. உங்களை யாரையுமே காணலியே என்று பேசிட்டிருந்தோம்.

திலகர் :- நீங்கள் கோப்பி கூடக் குடிக்கேல்லையாக்கும் சொறி, சொறி.

காமா :- டோன்ற் வொறி. ஆனா இப்படி முன்னாடியே தெரிஞ்சிருந்தா இரவே பிளாஸ்கில போட்டு வைச்சிருக்கச் சொல்லியிருப்பேன் உங்க வைப்கிட்டே.

திலகர் :- ஓம் நானும் அதைச்சொல்ல மறந்துபோனன். அவவும் மறந்து போனா. பறுவாயில்லை நான் இப்ப ஐஞ்சு நிமிசத்திலை போட்டுத்தாறன்.

கமலா :- உங்களுக்கேன் சிரமம். எனக்குச் சொல்லிக் கொடுங்கோ நான் போடுறேன்.

திலகர் :- நோ, நோ நீங்கள் இருங்கோ. நான் இப்ப போட்டுத்தாறன். சாத்திரியார் உங்களுக்கு என்ன போட?

காமா :- எனக்கொரு நெஸ் காப்பி போடுங்கோ பால் நன்னாவிட்டு சக்கரை கம்மியா போட்டு கொடுங்கோ.

திலகர் :- கம்மி என்றால் கொஞ்சங் கூடப்போடலாம் தானே.

காமா :- ஐயோ, கம்மி என்னா கொறைச்சு, கொறைச்சுப் போடுங்கோ.

கமலா :- அவாளுக்கு சர்க்கரை வியாதியோ இல்லையோ அதுதான் கொறைச்சுப்போடணும்.

காமா :- அதையேண்டி இப்போ சொல்லிக்கிட்டு. எனக்கு அப்படி ஒண்ணும் பெரிசா இல்லை சாடையாய் இருக்கு அதனாலை முன்னெச்சரிக்கையாய் இருக்கோனுமோ இல்லையோ.

திலகர் :- ஓம், ஓம் சுகர் கூட என்றால் கவனமாகத்தான் இருக்க வேணும் சரோ இன்னும் எழும்பவில்லை. இப்ப எழும்பி விடுவா. நான் எப்பவுமே வெள்ளனவே எழும்பியிருவேன்.

கமலா :- அப்படீன்னா நீங்கதான் எல்லாருக்கும் காப்பி போடுவீங்களாக்கும்.

திலகர் :- இங்கை பாருங்கோ அவரவர் தங்கடைவேலையைச் செய்து கொள்ளுறது. உங்களுக்கு என்ன மாதிரியம்மா சுகர்.

கமலா :- எனக்கெல்லாம் நர்மல்தான். நீங்க தாராளமாய் போடுங்கோ சர்க்கரை.

திலகர் :- சரி இந்தாருங்கோ நீங்களே போட்டுக்குடியுங்கோ.

காமா :- என்ன பேசிண்டே காப்பி போட்டுட்டேள் இவ்வளவு சீக்கிரமாப் பண்ணிட்டேளா.

திலகர் :- இங்கை எல்லாம் கரண்ட்தானே. கோப்பி மெஸினை தட்டிப்போட்டு பாலை மைக்ரோவேவிலை வைச்சால் 3 நிமிடத்திலை கோப்பி ரெடி.

காமா :- மைக்ரோவேவிலை பாலை வைக்கிறேளே அதாலை உடம்புக்கு கெடுதல் இல்லியோ?

திலகர் :- சாய் அப்படி ஒன்றும் வராது. இப்ப நாங்கள் கனடாவுக்கு வந்த காலம் தொடக்கம் அப்படித்தானே கோப்பி வைக்கிறது.

கமலா :- இப்போ நீங்க வந்து ரெம்ப நாளாச்சோ?

திலகர் :- ஓம் நாங்கள் வந்து இப்ப ஏறக்குறைய பத்து வருசமாச்சு.

காமா :- அடேயப்பா பத்து வருசமா? அப்போ நீங்க நேரே சிலோனிலை இருந்து வந்தேளா? எப்படி?

திலகர் :- இல்லை நான் ஜெர்மனியிலை இருந்து போட்டுத்தான் இங்கை வந்தனான்.

காமா :- அப்போ நீங்க றெபியூஜியாத்தான் வந்தீங்க என்னா?

திலகர் :- ஓம் நான் முதலிலை இங்கை வந்திட்டுப்பிறகு வைப்பையும் பிள்ளைகளையும் ஸ்பொன்சர் பண்ணிக்கூப்பிட்டனான்.

காமா :- இங்கை வந்து பத்து வருசத்துக்குள்ளை பிரமாதமாப் பண்ணிறியளே. இந்த வீடே ரொம்ப விலையாய் இருக்குமே?

திலகர் :- ஓம், ஓம் இது இப்ப எனக்கு three hundred and fifty thousand முடியுது.

காமா :- அப்படீன்னா 3 1/2 லட்சமுண்ணு சொல்லுங்கோ. பரவாயில்லையே சீப் போல இருக்கே.

கமலா :- ஏன்னா சீப் என்கிறேள் 3 1/2 லட்சம் டொலரெண்டால் எங்க ரூபாயிலே ரொம்பப் பணமாச்சே.

திலகர் :- ஓம், ஓம் உங்கடை இந்தியா ரூபாய் என்றால் கிட்டத்தட்ட 140 லட்சம் வரையிலை வரும்.

காமா :- அம்மாடியோ 140 லட்சமா? அப்படீன்னா ரொம்ப விலைதான் அதுதானே பாத்தேன் இவ்வளவு சீப்பா இருக்கேன்னு.

திலகர் :- இங்கை பாருங்கோ வீடெல்லாம் வலுகெதியாய் கட்டுவினை. ஆறு மாதத்திலை எல்லாவேலையும் விறுவிறென்று செய்வினை.

காமா :- ஆமா நேத்தைக்குக் கோயிலுக்கு நீங்க அழைச்சிண்டு போறப்போ பாத்தனே. குழந்தைகள் அட்டையாலை வீடு கட்டின மாதிரிப்பலகை அடிச்சுப்பண்ணிறாளே. ஸ்ரோங்கா இருக்குமோ என்ன?

கமலா :- என்ன? பலகையா அது. நான் என்னமோ ஏதோண்ணு நினைச்சேன்.

திலகர் :- இங்கை குளிரை தாக்குப்பிடிக்கிறதுக்குப் பலகை போட்டு அதுக்குள்ளை insulation எல்லாம் வைத்துப் பிறகுதான் வெளியிலை சுவர் கட்டுவார்கள். எதையும் நல்ல கவனமாகத்தான் செய்வினம்.

காமா :- இன்சுலேசன்னா என்ன? ஒரு விளக்கமாய்த்தான் சொல்லுங்களேன்.

திலகர் :- அதாவது மரப்பலகைக்கிடையிலை பஞ்சு போன்ற ஒரு fiberglass sheets வைப்பினை. இது குளிரை உள்ளுக்கை போக விடாது.

காமா :- ஓஹோ கிளாஸ் வைக்கிறாளா. நல்லது நல்லது நம்ம ஊரிலை இதெல்லாங் கிடையாது. செங்கல்லை வைச்சே மாடி மாடியாக்கட்டுறா ஊருக்குஊர் வித்தியாசந்தான்.

திலகர் :- கோப்பி ஆறுது குடியுங்கோ.

கமலா :- (குடித்துக் கொண்டே) கோப்பி நன்னாத்தான் இருக்கு.

காமா :- ஆமா நேத்தைக்கு ஒரு ஹைவேயிலை அழைச்சிண்டு போனேளே. ஆறு லேனிலை கார் எல்லாம் ஓடுறது. எனக்கு உங்க பக்கத்திலை உக்காந்திருந்தப்போ ஒரே பயமாப் போட்டுது விசுக்கு, விசுக்குன்னு வண்டியெல்லாம் வேகமாய்ப்போறது. உங்களுக்கெல்லாம் பயமாய் இருக்காதோ என்ன?

திலகர் :- அது சாத்திரியார் ஆரம்பத்திலை பார்க்கப் பயமாய்த்தான் இருக்கும் பிறகு பழகப்பழக எல்லாஞ் சரியாப்போம்.

கமலா :- என்ன நீங்க பாக்கவே இல்லியா. பொம்மனாட்டி எல்லாம் என்ன வேகமாய் போறா.

காமா :- பொம்மனாட்டி மட்டுமா வேகமாய்ப்போறா எல்லாருமே வேகமாத்தானோ போறா. நம்ம ஊரிலை ஊர்ந்துக்கிட்டுப் போகனும் ரோட்டெல்லாம் ஒரே குண்டு குழியுமா இருக்கும். இது என்ன ரோட்டு மாதிரியா இருக்கு. எங்க வீட்டு ஹால் மாதிரி என்ன கிளீனா வைச்சிருக்கிறா.

திலகர் :- இங்கை பாருங்கோ ஹைவேயிலை ஸ்லோவாப்போக முடியாது போனால் பொலிஸ் புடிச்சுப்போடுவான்.

காமா :- என்ன ஸ்லோவாப்போனா பொலிஸ் புடிக்கிறானா? இது வேடிக்கையாய் இருக்கே. நம்ம ஊரிலை பாஸ்டாப் போனால் புடிக்கிறான் இங்கை ஸ்லோவாப் போனால் புடிக்கிறான்.

திலகர் :- ஒவ்வொரு ரோட்டுக்கும் ஒவ்வொரு ஸ்பீட் லிமிற் இருக்குது. அதைக்காட்டிலும் கூட ஓடவும் கூடாது, அதிகம் குறைய ஓடவும் கூடாது.

காமா :- நம்ப ஊரிலும் ஸ்பீட் லிமிற் உண்டு. ஆனா அதை யார் கவனிக்கிறா. அவனவன் விரும்பியபடி ஓடுறான். யார் கேட்கிறா. பொலிஸ் கேட்டா போய்யா என்னுட்டுப் போய்க்கிட்டே இருப்பான். எல்லாம் ஒரே குளறுபடிதான் அங்கே.

கமலா :- ஏன்னா இந்த பஸ் ஸ்டாப்பிலை எல்லாம் என்னா ஒழுங்கா ஏறுறா பார்த்தேளா. நம்ம ஊரிலை பொண்ணுக குழந்தையளை எல்லாம் இடிச்சுத்தள்ளிட்டு ஆம்பிளையாள் அடிச்சுப்பிடிச்சு ஏறுவா.

திலகர் :- ஓம் இங்கை பஸ்ஸிலை போற ஆட்களும் குறைவு. அநேகமாக ஒரு வீட்டிலை இரண்டு மூன்று கார் இருக்கும். அதோடை பஸ்ஸெல்லாம் அடிக்கடிவந்து கொண்டே இருக்கும்.

காமா :- ஏன் சார் இங்கை கண்டக்டரில்லாமே பஸ் ஓட்டுறாளாமே. அதெப்படி? ஆச்சிரியமாய் இருக்கே. நம்ம ஊரிலை ஒரு சின்ன பஸ்சுக்கே சிலவேளை இரண்டு கண்டக்டர் நின்னுண்டு ரிக்கற் ரிக்கற் என்னு கத்திட்டே இருப்பான்.

திலகர் :- ஓம் இங்க சிஸ்டம் வித்தியாசம். ஏறும் போதே டிரைவரிட்டை ரிக்கற் வாங்க வேண்டும். நீங்கள் எங்கை போனாலும் ஒரே சார்ஜ்தான் நீங்கள் விரும்பிய இடத்தில் இறங்கலாம்.

கமலா :- அதென்ன அநியாயம் அடுத்த கடைத்தெருவுக்குப் போறதுக்கும் அஞ்சு ரூபாதான் ஐம்பது மைல் போறதுக்கும் அஞ்சு ரூபாதானா?

திலகர் :- இங்கை வந்து ஒரு குறிப்பிட்ட ஏரியாவுக்குள்ளை எங்கை போனாலும் ஒரே சார்ஜ். அதற்கு வெளியாலை

போனால் அடிசனலாய்க் கொடுக்க வேணும் பொதுவாக சிற்றிக்குள்ளை எங்கை போனாலும் பஸ்சுக்கும் சப்வேக்கும் ஒரே சார்ஜ்தான்.

காமா :- சப்வேயா அது என்னா? நீங்க சொல்லக்கூட இல்லையே!

திலகர் :- ஓம் அது நிலத்துக்குக்கீழால ஓடுற றெயில்.

கமலா :- என்ன நிலத்துக்குக்கீழால றெயில் ஓடுறதா! அம்மாடியோ! அதெப்படி தரை இடிஞ்சு விழாதோ என்ன?

திலகர் :- ஓம் அது மிகவும் குயிக்காப்போற றெயில். போறது மிகவும் லேசும், டிலேயும் இருக்காது. மேலாக ஓடினா வாகன நெரிசல் டிலே எல்லாம் இருக்கும்.

காமா :- நீங்க சொல்லுறது எல்லாம் சரி. நம்ம ஊரிலை அடிக்கொருதடைவை றெயில் வருது என்னுட்டு கேட்டைச்சாத்திடுவான். வண்டியெல்லாம் மணிக்கணக்காக காத்திண்டு இருக்கும்.

கமலா :- அதுக்குத்தானே இப்போ ஓவர் பிறிஜ்ஜெல்லாம் கட்டியிருக்காளே முன்னையக்காட்டிலும் இப்போ பரவாயில்லை.

காமா :- என்னத்தைக்கட்டினாலும் எங்கை அடங்குறது. ஜன நெருக்கடி மட்ராசிலை ஜாஸ்தியாயிட்டுதோ என்ன. வீதியிலே நடக்கிறதே ரொம்ப சிரமமாயிட்டுது. அப்புறம் வண்டியிலை போறது எப்படி இருக்குமென்னு நெனைச்சுப்பாருங்கோ.

கமலா :- ஆமா இங்கயெல்லாம் காலேல நீங்க ஒண்ணும் சாப்பிடுறதே இல்லையா?

திலகர் :- இங்க அநேகமாக ஒரு கோப்பியோட எல்லாரும் வெளியில போனால் மத்தியானந்தான் சாப்பிறது.

காமா :- என்ன வேடிக்கையாயிருக்கே, காலயில சாப்பிடாம எப்படீ? பசிக்காதோ என்ன?

திலகர் :- அது பாருங்கோ பழகிப்போச்சு

கமலா :- காலேல ஏதாச்சும் சாப்பிடணும் அப்படி இல்லன்னா அது உடம்புக்கு கெடுதல் இல்லயா, இவாளுக்கெல்லாம் காலயில இட்லி தோசைன்னு ஏதாவது பண்ணனும்.

காமா :- அது சரி, இப்போ என்ன சாப்பிடுவோம், நமக்குப் பசி கிளம்பிட்டுதோ என்ன.

திலகர் :- உங்களுக்கு சீரியல் இருக்குது, பாண் இருக்குது, பேகல் இருக்குது, எது விருப்பமோ சாப்பிடலாம்.

காமா :- என்ன சீரியலா? அது நாடகமா, சாப்பாடா? நீங்கள் ஏதோ தெரியாததையெல்லாம் சொல்லிப் பயப்படுத்திறேள், எங்களுக்கு பிறெட் குடுங்கோ - அது இல்லயா?

திலகர் :- ஓம் அதுதான் பாண்

காமா :- ஓஹோ! பிறெட்டைத்தான் பாண் என்று சொல்லுவேளா? அதுதானே பாத்தன் என்னடா இவா தெரியாத பேரெல்லாஞ் சொல்லுறாளே என்னுட்டு.

கமலா :- வேறெல்லாம் ஏதோ சொன்னாளே - அதெல்லாம் என்ன?

திலகர் :- ஓம் அது சீரியலும் பேகலும் - இதுவுமொருவகைப் பாண் மாதிரித்தான். இதுதான் சீரியல், இதுபேகல், இது மபின் (காட்டுகிறார்).

கமலா :- மபினா! இது நம்ம ஊருப்பணியாரம் மாதிரி இருக்கே இது என்ன ஒரு மாதிரி சொரசொரப்பா இருக்கே

திலகர் :- இது வந்து பிறான் மபின் - உடம்புக்கு நல்லது சாப்பிட்டுப்பாருங்கோ.

கமலா :- பிறான் மபினா? அதென்னத்தில பண்ணுவா?

திலகர் :- அது மாவோட தவிடும் சேர்த்துச்செய்யிறது

கமலா :- என்ன தவிடா? அப்படீன்னா புண்ணாக்கிலேயும் பணியாரம் பண்ணுவாளா என்ன?

திலகர் :- (சிரித்துக் கொண்டே) சீச்சீ அப்படியில்ல, இது தவிடு உடம்புக்கு நல்லதெண்டு கொஞ்சமாய் மாவோட கலந்து செய்யிறது சீனியும் போட்டு.

கமலா :- (சாப்பிட்டுப்பார்த்துவிட்டு) என்னா இது - நல்லாவே இல்ல, இதையெல்லாம் எப்படிச் சாப்பிடுறேள்? சொர சொரன்னிட்டு இருக்கே.

திலகர் :- அது சாப்பிட்டுப் பழகினா நல்லா இருக்கும். இங்க எல்லாரும் இதைத்தான் விரும்பிச்சாப்பிடுறது.

காமா :- அது சரி - மாட்டுச்சாப்பாட்டை சாப்பிடுறா, அப்புறம் மாட்டைச் சாப்பிடுறா, மாடுமாதிரியே நடந்துக்கிறா. நல்ல வேடிக்கையா இருக்குது இங்கெல்லாம்.

கமலா :- நன்னாச் சொன்னேள். போங்கோ - அன்னிக்கு ரீவியில காட்டினாளே பார்த்தேளா - என்ன அசிங்கமா நடந்துக்கறா - ரொம்ப மோசமோன்னா!

காமா :- எப்போ பார்த்தே நீ - ரீவியில் இந்த அசிங்கமெல்லாம் அன்னிக்குப்பகல் நா தூங்கிண்டு இருக்கும்போதா?

கமலா :- ஆமா யாருமே இல்ல சக்தி ரீவி பாப்பமேன்னு போட்டன்.

காமா :- ஏண்டி அப்போ என்ன எழுப்பியிருக்கலாமோ இல்லியோ?

கமலா :- அந்த அசிங்கமெல்லாத்தையும் நீங்கள் பார்க்கிறதா? அபச்சாரம் அபச்சாரம்.

காமா :- அப்படி என்ன அசிங்கத்த பாத்துட்டாய் நீ.

கமலா :- அதெல்லாம் கிடக்கட்டும் நீங்க என்ன சாப்பிடப்போறேள்.

காமா :- இட்லி ஒண்ணும் கிடையாதோ?

திலகர் :- உங்களுக்கு இட்லி வேணுமெண்டால் கடயிலதான் வாங்கவேணும் 10, 11 மணி செல்லும்

காமா :- ஐயையோ! தாங்காது சாமி. பிறெட்டோடே சமாளிச்சுக்கலாம்

(சரோஜா மாடியிலிருந்து இறங்கி வருகிறாள்)

சரோஜா :- சொறி. நான் இண்டைக்கு சற்றடே எண்டு கொஞ்சம் கூட நித்திரை கொண்டுட்டன், நீங்கள் சாப்பிட்டு விட்டியளோ? கோப்பி குடிச்சிட்டியளோ? இஞ்சேரப்பா நீங்கள் இவைக்குக் கோப்பி போட்டுக் குடுத்தியளோ?

திலசர் :- அவையெல்லாம் கோப்பி குடிச்சிற்றினம் - இன்னுஞ் சாப்பிடேல்ல - சாத்திரியாருக்கு இட்லி வாங்கிக்கொண்டு வருவம் எண்டு யோசிச்சன்.

காமா :- பரவாயில்ல அப்பறம் பாத்துக்கலாம் நீங்க பிறெட்டை கொடுங்கோ.

திலகர் :- இல்ல வேணுமெண்டால் போய்ப் பாத்துக்கொண்டு வரட்டே?

சரோஜா :- அவங்கள் 11 மணிக்குப்பிறகுதானே திறப்பாங்கள் - நீங்கள் இப்ப எங்க போய்ப் பார்க்கப்போறியள். இரவைக்கு வேணுமெண்டால் அவையையும் கூட்டிக்கொண்டு போவம் கடைக்கு.

காமா :- இராத்திரிக்கு அவர் சாம் வரச்சொன்னாரே-சாப்பாட்டுக்கு மறந்து போச்சா?

சரோஜா :- ஆரப்பா சாம்?

திலகர் :- அவர்தான் எங்கட சாம்பசிவம்.

சரோஜா :- அட அவரே. அவருக்கே வீட்டை சாப்பாடு கிடையாது அதுக்குள்ளை இவையையும் வரச்சொன்னவரே. ஏன் கடையிலை எடுத்துக்கொண்டு வரப்போறாராமே?

திலகர் :- அவையின்ரை கதை உமக்கும்தேவையில்லை. நீர் இப்ப Break fast ready பண்ணும் நேரம் போகுது. அவருக்குப் பின்னேரம் Program இருக்கெல்லே.

சரோஜா :- அது பின்னேரந்தானே. அதுக்கு நேரங்கிடக்கே.

காமா :- ஆமா அந்த Reporter பையன் வர்றானா இல்லையா? சாயங்காலம் எத்தனை மணிக்கு வர்றதாச் சொன்னான்.

சரோஜா :- ஓம் ஓம் அவன் 10 மணிக்கு வாறன் எண்டு சொன்னவன். அது நான் சொல்ல மறந்து போனன். இன்னுங்கொஞ்ச நேரத்திலை ஆள் வந்திடும்

காமா :- அப்படியோ. அப்போ நாம சாப்பிட்டுட்டு றெடியாகணுமோ இல்லியோ?

கமலா :- ஆமா நீங்க Dress பண்ணிக்கணும் இல்லியா அங்க வஸ்திரமெல்லாம் அயன் பண்ணி வச்சிருக்கா.

காமா :- அதென்ன பெரிய வேலயா? அரை மணித்தியாலத்தில ரெடியாயிருவனோ இல்லியோ நீ ஏன் இப்ப அலட்டிக்கிறே.

கமலா :- இல்ல நீங்க மறந்திட்டீங்களோ என்னவோன்னு ஞாபகப்படுத்தினேன்.

சரோஜா :- சரிசரி நீங்க வாங்க- உங்களுக்கு ஓம்லெட் போடட்டே?

கமலா :- என்னது ஓம்லெட்?

சரோஜா :- அதுதான் முட்டை, முட்டைப்பொரியல்

கமலா :- ஐயையோ-அதெல்லாம் நாங்க சாப்பிடமாட்டம்- உங்களுக்குத் தெரியாதா என்ன?

சரோஜா :- சொறி, சொறி நான் மறந்து போனன். அப்படியெண்டா பட்டர், ஜாம் எல்லாம் இருக்குச் சாப்பிடுங்கோ! coffee ஒண்டு போடட்டே?

காமா :- பரவாயில்லைப் போடுங்கோ-சாப்பிட்டாப்புறம் குடிச்சிக்கலாம்-பழம் ஒண்ணும் கிடையாதோ?

சரோஜா :- ஆப்பிள் இருக்குத் தரட்டே?

காமா :- ஆப்பிள் சரி எடுங்கோ-ஏண்டி கமலா இந்த ஆப்பிள் கட் பண்ணிக்கோ.

## (காட்சி மாற்றம்)

### காட்சி 2

(திலகர் வீடு -காலை 11 மணி, கதவில் தட்டுஞ் சத்தம்)

சரோஜா :- போய்ப் பாருங்கோ - ஆரோ கதவில தட்டுகினை.

திலகர் :- (கதவைத் திறந்துகொண்டே) நீங்கள் ஆர்?

குமார் :- நான் குமார்-திருவிளையாடல் பத்திரிகை ரிப்போட்டர் காமா சாஸ்திரி இருக்கிறாரோ

திலகர் :- ஓம் ஓம் வாருங்கோ-உங்களத்தான் பாத்துக் கொண்டிருக்கிறார்

குமார் :- வணக்கம் சாஸ்திரிவாள்-கொஞ்சம் பிந்திப்போச்சு-வேறொரு இடத்தில கவரேஜ்-சுணங்கிப்போச்சு-சொறி.

காமா :- வணக்கம் வணக்கம் சொறி கிறி எல்லாம் வேணாம்-நீங்க 10 மணிக்குத்தானே வாறேன் என்னு சொன்னேள்.

குமார் :- ஓம் அதுதான் லேட்டாய்ப்போச்சு-நீங்கள் றெடி யெண்டால் நாங்கள் பேட்டியைத் தொடங்கலாம்

காமா :- பேஷாத் தொடங்கலாமே-இவ என்னுடைய சகதர்மினி கமலா நான் போற இடமெல்லாம் வந்துடுவா.

குமார் :- அதுதானே பாஷன் இப்ப-கலைஞர்கள் தாங்கள் போற இடமெல்லாம் தங்கள் குடும்பத்தையே கூட்டிக்கொண்டு போறது.

காமா :- நான் அப்படி இல்ல-இவாளை மட்டுந்தான் அழைச்சுண்டு போவன்.

குமார் :- உங்களைச் சொல்லவில்லை, பொதுவா கலைஞர் களைப்பற்றித்தான் சொன்னேன் - சரி அது இருக்கட்டும், உங்கட வரலாற்றைக் கொஞ்சம் சொல்லுங்கோ கேட்பம்.

காமா :- எனது வரலாறு என்னன்னா-என்னோட அப்பா தாத்தா எல்லாருமே காலேட்சபம் பண்ணுவா. அந்த நாள்ல தஞ்சாவூரு தனஞ்சயன் சாஸ்திரிகள்ன்னா அதுக்கு ஒரு தனி மவுசு-ஜனம் நிரம்பி வழியும்-மணிக்கணக்கா அவாள்ட கச்சேரியக்கேட்டுண்டே இருப்பா.

குமார் :- தனஞ்சயன் உங்கட அப்பாதானே?

காமா :- ஆமா அவாள்ட பெயர் முழுத்தமிழ்நாட்டுக்குமே தெரியும் அவா குடுத்த ட்ரெயினிங்கிலதான் நான் இப்போ பண்ணிண்டு இருக்கேன்.

குமார் :- அப்போ உங்கட அப்பாதான் உங்கட குரு எண்டு சொல்லுறியள்.

காமா :- ஆமாய்யா-அது கூடத்தெரியாதா?

குமார் :- சரி நீங்க எத்தனை வயசில கச்சேரி பண்ண ஆரம்பித்தீர்கள்?

காமா :- சின்னவனா இருக்கிறச்சயே அப்பா கூடப் பிற்பாட்டுக்காகப் போவேன் அவரது பாட்டு, பேச்சு எல்லாத்தையும் அப்படியே மனப்பாடம் பண்ணிடுவேன், இதெல்லாம் எனக்கு நச்சுரலாகவே வந்துடுத்து.

குமார் :- அது சரி! பாவக் கொட்டை போடச் சுரக் கொட்டையா முளைக்கும்.

காமா :- அதென்னய்யா பாவக்கொட்டை ஒண்ணுமே புரியமாட்டேங்குறது.

குமார் :- பாவக்காய் தெரியாதா உங்களுக்கு?

கமலா :- பாவக்காய் விதையைப்பற்றிச் சொல்றா.

காமா :- ஓஹோ! பாவல் விதையா-பழமொழியா? சரி சரி இப்ப புரியறது.

குமார் :- அது சரி நான் கேட்ட கேள்விக்கு நீங்கள் என்னும் மறு மொழி சொல்லவில்லையே?

காமா :- என்ன கேள்வி கேட்டேள்?

குமார் :- எத்தனை வயசில கச்சேரி பண்ண ஆரம்பிச்சியள் எண்டு கேட்டன்?

காமா :- ஓ! அதுவா-அது ஒரு பெரிய கதை.

குமார் :- அப்ப சுருக்கமாச் சொல்லுங்கோ கேப்பம்.

காமா :- ஒரு நாள் மதுரயில கச்சேரி-எல்லாம் ரெடி பண்ணிட்டோம் எல்லாரும் ட்ரெயினில போறதா முடிவு பண்ணியாச்சு. முதநாள் கிணத்தடியில என் தோப்பனார் வழுக்கி விழுந்து காலுடைஞ்சு போச்சு ஒரே குழப்பமாயிடுச்சு-எல்லோருக்கும் கவலை-அப்போ எனக்கு வயது 15 தோப்பனார் என்னை அழைச்சுக் கேட்டார், டேய் காமா நீ கச்சேரி பண்றியான்னு-நா உடன்னே ஆமான்னுட்டேன் அம்மாவுக்கெல்லாம் விருப்பமே இல்லை-அவனைப்போய் அனுப்புறேளே அவன் என்ன பண்ணுவான்-நீங்க உடம்பு சுகமான அப்புறம் போய்ப் பண்ணலாமேன்னு அலட்டிக்கிட்டா-என் தோப்பனார் சொன்னார்-எங்க காமாவைப்பத்தி நோக்குத் தெரியாது அவன் நன்னாப் பண்ணுவான்கிற நம்பிக்கை நேக்குண்டு நீ அலட்டிக்காதேன்னார்.

குமார் :- அப்ப நீங்கள் 15 வயசில கச்சேரி பண்ண ஆரம்பிச்சியள் எண்டு சொல்லுங்கோ.

திலகர் :- அப்ப நீங்கள் நாப்பது வருஷமாய்க் கச்சேரி பண்ணுறியள் எண்டு சொல்லுங்கோ

காமா :- யார் சொன்னா உங்களுக்கு?

திலகர் :- அண்டைக்கு நீங்கள்தானே கதைக்கும்போது சொன்னியள்.

காமா :- ஓ - அப்படியா இருக்கலாம்

திலகர் :- அப்ப 40 வருஷமாக் காலட்சேபம் செய்யிறியள்- எங்கையெல்லாம் போயிருக்கிறியள்

காமா :- நான் ரொம்ப இடங்களுக்கெல்லாம் போயிருக்கேன் ஆனா் கனடா வந்தது இதுதான் முதல் தடவை.

திலகர் :- ரொம்ப இடங்களென்றால் எந்தெந்த இடங்கள்

காமா :- மலேசியா, சிங்கப்பூர், சிலோன், எல்லாம் போயிருக்கேன் ஆனா சினிமாக்காரங்க மாதிரி அடிக்கடி போறதில்லை- எப்பவாச்சும் யாராச்சும் கூப்பிட்டா போவேன்.

சரோஜா :- நீங்கள் சிலோனுக்கு எப்ப போனியள்?

காமா :- சிலோனுக்குப்போய் ரொம்ப நாளாச்சு-ஏழெட்டு வருஷமாச்சு.

சரோஜா :- எங்கை கொழும்புக்கோ யாழ்ப்பாணத்துக்கோ?

காமா :- கொழும்பிலதான் ஒருவாட்டி வேல் விழான்னு கூப்பிடாங்க - அப்புறம் எல்லாமே குழப்பமா இருக்கிறதினால நான் அங்கிட்டுப் போறதில்லை

குமார் :- சரி, நீங்கள் செய்யிற கச்சேரியில சனங்களுக்குப் பிடிச்ச கச்சேரி எதுன்னு நினைக்கிறீர்கள்.

காமா :- பொதுவாச் சனங்களுக்கு எனது கச்சேரி எல்லாமே பிடிக்கும் விடிய விடிய உக்கார்ந்து கேட்டுக்கோண்டே இருப்பா.

குமார் :- குறிப்பா என்று இரண்டைச் சொல்லுங்கோ.

காமா :- இராமாயணத்தில பண்ணுற சீதா கல்யாணம், பட்டாபிஸேகம் அப்படீன்னு சொல்லலாம்.

குமார் :- வேறு என்ன கச்சேரிகள் பண்ணுவீங்கள்.

காமா :- நிறையப் பண்ணியிருக்கேனே மார்க்கண்டேயர், ஹரிச்சந்திரா, நளமகராஜன் அப்படின்னுட்டுப் பண்ணியிருக்கேன்.

குமார் :- சமய சம்பந்தமானகச்சேரிகள் பண்ணுவதில்லையா?

காமா :- யார் சொன்னா நிறையப்பண்ணியிருக்கேனே விநாயகர் கதை, சம்பந்தர், அப்பர் வரலாறெல்லாம் பண்ணியிருக்கேனே.

குமார் :- சரி கனடாவைப் பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன.

காமா :- கனடாவிலை ரொம்பக்கிளீனா எல்லாத்தையும் வச்சிருக்கா. இந்த சூப்பர் மார்கட் எல்லாம் சூப்பராவே இருக்கு. என்ன சைசோன்னோ! ஒரு பெரிய சிற்றி போலவே இருக்கு. எவ்வளவு வண்டிகள் தெருக்கள் எல்லாமே ரொம்ப வசதியாய்த்தான் இருக்கு.

கமலம் :- கோயிலைப் பற்றி சொல்லலியே நீங்கள்.

காமா :- ஆமா உங்க கோயில் றிச்மண்ட் வினாயகர் கோயில் நல்லாவே பண்ணியிருக்காங்க. ஆனா ஒண்ணு.

குமார் :- என்ன சொல்லுங்கோ.

காமா :- பார்க்கிற இடங்களிலெல்லாம் விக்கிரகங்களை வச்சு கலக்கிட்டாங்க. முன்னாடி பின்னாடி பக்கத்தில் என்னுட்டு. இதால பக்தியே வரமாட்டேங்குது. பார்க்கிறவன் சிரிக்கிறாப்போல பண்ணக் கூடாது, இதுக்கெல்லாம் ஒரு முறை இருக்கு நம்ப பெரியவாளெல்லாம் எழுதி வைச்சிருக்கா இன்னமாதிரியாப் பண்ணனும்ண்ணுட்டு அதைப்பார்த்துச் செய்யணும் நாம.

கமலம் :- எப்படியும். இப்படி ஒரு கோயிலை இவ்வளவாயிரம் மைலுக்கப்பாலே பண்ணியிருக்கீங்களே பாராட்டத்தான் வேணும்.

காமா :- அதையெல்லாம் நான் கொறை சொல்லலை. ஆனா கொஞ்சம் யோசிச்சுப்பண்ணியிருந்தா நன்னா இருக்குமேன்னு சொன்னேன்.

திலார் :- நீங்கள் சொல்லுறது சரி. நீங்கள் மட்டுமல்ல இன்னும் இரண்டொருவர் கூட இப்படித்தான் சொன்னவை. இது ஏனென்றால் இங்கு ரொரன்டோவில இருக்கிற சைவர்கள் வைஸ்ணவர் எல்லோரையும் சந்தோசப்படுத்தத் தான் எல்லாச்சாமியையும் வைச்சிருக்கினம்.

காமா :- அது நல்ல நோக்கம்தான். ஆனா எல்லாத்தையும் இப்படிக்கண்டகண்ட இடத்திலை வைக்காம ஒரு ஒழுங்கில தனித்தனியாப் பண்ணியிருந்தா நன்னா இருக்குமேன்னு சொன்னேன். இதை நீங்க தப்புத்தப்பா எழுதி நம்பளை வம்பிலை மாட்டி விட்டுடாதேள்.

குமார் :- சார் அப்படியில்லை நீங்கள் பயப்படாதேங்கோ. நான் அப்படி எழுத மாட்டன். மற்றது இங்க வாழ்கிற மக்களைப்பற்றி என்ன நினைக்கிறீங்கள்.

காமா :- மக்களைப் பற்றி திலகர் நிறையவே சென்னார் ஏதோ 100 ஓ 130 ஓ மொழி பேசுகிறவங்க ரொரன்ரோவில இருக்காங்கன்னுட்டு. இவ்வளவு பேரையும் சமாளிக்கிறாங்களே என்பது ஆச்சரியமாய்த்தான் இருக்குது.

குமார் :- இங்கை பாருங்கோ. அவனவன் தன்ரை வேலை, காசு, குடும்பம் என்று ஓடித்திரியிறதிலை பிரச்சனைகள் குறைவு.

காமா :- புரியுது இப்போ புரியுது. இங்கே எல்லோருமே மெசின் மாதிரி வேலை பார்க்கிறா. அங்கை சாப்பிட்டுட்டுத்திண்ணை தூங்கிறவன்தான் கூட. அவனுக்கு ஏதாவது வம்பு செய்யலன்னா தூக்கமே வராது. அதனாலைதான் நம்ம நாட்டிலை பிரச்சனை எல்லாம்.

குமார் :- உங்கடை நாட்டிலை அரசியலுக்கும் சினிமாவுக்கும் மக்கள் முக்கியத்துவம் கொடுக்கினை. இங்கை அப்படியில்லை.

காமா :- ஆமா நீங்க சொல்லுறது வாஸ்தவம்தான். இப்போ தமிழ் நாட்டை எடுத்தீங்கன்னா அரசியலையும் சினிமாவையும் நம்பியே நாடு முழுவதும் ஓடிகிட்டு இருக்குது. இது இரண்டும் இல்லையென்றால் நாடே இயங்காது என்ற நிலை. கேட்டேளோ.

திலகர் :- சரியாச் சொன்னியள் எனக்கு ஞாபகம் இருக்குது எம். ஜீ. ஆர் இறந்தபோது நாலைந்து பேர் தாங்களும் தீமுட்டிக்கொண்டு இறந்து போனார்கள் என்று பேப்பரிலை எல்லாம் வந்தது.

காமா :- ஆமா எங்கட மக்களுக்கு சினிமா என்றால் பைத்தியம். ஏனென்றால் அவங்களுக்கு இருக்கிற பொழுது போக்கு அது மட்டும்தான்.

குமார் :- நீங்கள் சொல்லுறது சரி. இங்கை எத்தனையோ பொழுதுபோக்குக்கள் உண்டு. சினிமாவுக்குப் போகிறவர்கள் குறைவு. வீட்டிலேயே ரீவியிலோ டிவிடியிலோ பார்த்துப்போட்டு இருந்து விடுவார்கள்.

காமா :- எல்லாத்துக்கும் பணந்தான் காரணம். சாப்பாட்டுக்கு வழியில்லாட்டிலும் சினிமா பார்க்கிறதை நிப்பாட்டாதவன் கூட நாட்டிலை இருக்கிறான் என்றால் பாருங்களேன்.

குமார் :- சரி இங்கை வேற என்ன பார்த்தீர்கள்.

காமா :- அண்ணைக்கு ஏதோ ரவர் எண்டு கூட்டிட்போனாங்க. ஏதோ பிளேனிலையிருந்து பார்த்த மாதிரி இருந்தது மேலையிருந்து பார்க்கிறப்போ. ஒரு சாதனைதான். எவ்வளவு கிளீனாக்கட்டி இருக்காங்க எப்படி இதைக்கட்டினாங்க என்னு நினைச்சுப்பார்த்தா பிரம்மிப்பாத்தான் இருக்கு. விஞ்ஞானத்தில நல்ல முன்னேற்றம்.

சரோஜா :- சி.என் ரவரைப்பற்றிச் சொல்லுறார்.

கமலா :- ஆமா நம்ம நாட்டிலையும் கோவில் மேலை கட்டுற கோபுரம் மாதிரி இதையும் பண்ணியிருக்கா. நம்ம தஞ்சாவூர் கோபுரம் நிழலே கீழ விழாத மாதிரிக்கட்டினாங்க. இப்போ எத்தனையோ ஆயிரம் வருசங்களுக்கு முன்னாடி. இதிலை நிழல் விழுறதே பார்த்தேன்.

குமார் :- நீங்கள் சொல்லுறது சரி. எங்கடை முன்னோர்களும் எந்த விதத்திலும் சோடை போனவர்கள் இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்ளுறன்.

காமா :- ஆமா இவாள் சொல்லுறது வாஸ்தவந்தான் நம்ம கற்றூாண்கள் கோவில் கோபுரங்கள் எல்லாம் கிறேன் ஒண்ணும் இல்லாத காலத்திலை யானைகளின் உதவியும் அதன் உதவியுடன் கட்டிய கட்டடங்கள் கலைப் பொக்கிசங்கள் மாதிரியெல்லாம் இப்ப பண்ண முடியுமோ என்ன. கஸ்டந்தான்.

குமார் :- வேற என்ன பார்த்தீர்கள் இங்கை.

காமா :- இங்கை நயாகரா Falls என்னவோ என்னு சொன்னாங்க. இன்னமும் பார்க்கலை இவங்க

திலகர் :- ஓம் உங்கடை கச்சேரியெல்லாம் முடியப்போவம்.

குமார் :- இங்கை எத்தனை கச்சேரிகள் செய்யப் போறீங்கள்.

காமா :- ஏற்கனவே ஒண்ணு பண்ணியாச்சு. சாயந்திரம் ஒண்ணு பண்ணுறேன் அப்புறம் மொன்றியல் என்னுட்டு ஒரு இடத்திலையும் பண்ணணும் என்னாங்க. அதுதான் அவங்களைக்கேட்கணும்.

திலகர் :- ஓம் இன்னும் இரண்டு நாளிலை மொன்றியல் போய் அங்கையும் ஒரு கச்சேரி செய்கிறார்.

குமார் :- நல்லது. நீங்கள் இங்கை இருக்கிற தமிழ் மக்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்.

காமா :- என்னத்தைச் சொல்லுறது. எங்கடை மொழியையும் கலாச்சாரத்தையும் கட்டிக்காக்கும் பொறுப்பு உங்களுடையது. கனேடிய நீரோட்டத்திலை அடித்துச் செல்லப்படாமல் தமிழர்களாக வாழப்பழகிக்கொள்ள வேணும். இப்படி அடிக்கடி தமிழ்நாட்டுக் கலைஞர்களை அழைத்து தொடர்புகள் அறுத்து போகாமல் பாத்துக் கணும். ஒற்றுமை முக்கியம். எல்லாரும் அடிச்சுப் பிடிச்சுக் கிட்டு இருக்காம வந்த நாட்டிலை பிரச்சனையில்லாமல் இருந்தா எல்லாருக்கும் நல்லதோ இல்லையோ.

குமார் :- இப்போ நீங்கள் எங்களுக்காக உங்கள் கச்சேரியில் ஒரு சிறு பகுதியைப் பண்ணிக் காட்டுங்கோ பாப்பம்.

காமா :- மன்னிச்சிருங்கோ. கலைஞர்களையெல்லாம் அப்படிக் கேட்கக்கூடாதுன்னா. அவரவருக்கு கொடுக்கிற கௌரவத்தைக் கொடுக்கணும். வேணும்ணா சாயங்காலம் வந்து றெக்காட் பண்ணிக்கோங்கோ ஒரு Part ஐ மட்டும் முழுவதுமில்லை.

குமார் :- சொறி சேர். வழக்கமாக நான் இப்படிக் கேட்டுப் பழகிப் போச்சு.

காமா :- பரவாயில்ல உங்களைக் குறையாச் சொல்லலை நம்ம ஆளுக சில பேர் அப்படிப் பண்ணுறா அது நமக்குச் சரிப்பட்டு வராது.

குமார் :- இவ்வளவு நேரமும் உங்கள் சிரமத்தைப் பாராமல் இந்த பேட்டி கொடுத்ததுக்கு நன்றி

காமா :- உங்களுக்கும் நான் நன்றி சொல்லணும். அப்புறம் நம்ம நாட்டிலை இப்படி பேட்டிக்கெல்லாம் பணம் கொடுப்பா. நீங்க எப்படி?

குமார் :- மன்னிக்கவேணும் சேர். எங்கடை பத்திரிகை காசுக்கு விக்கிறதில்லை. ,பிறீயாய்தான் எல்லோருக்கும் கொடுக்கிறது. அதுதான் உங்களுக்குச் சன்மானம் கொடுக்க முடியாத நிலையிலை இருக்கிறம் ஆனால் உங்களுக்கு ஒரு பார்ட்டி ஒன்று ஒழுங்கு செய்யிறதா எங்கடை எடிட்டர் சொன்னவர். நான் அதைப் பற்றிப் பிறகு போன் பண்ணுறன்.

காமா :- இங்கை எல்லாம் பிறீயாய்தான் கொடுக்கிறீங்க போலை. அப்படி சனங்களைப் பழக்கிட்டீங்கன்னா அப்புறம் பத்திரிகை எதையுமே பணங் கொடுத்து வாங்க மாட்டாங்க. பிறீ என்னா நம்ம ஆளுக தலைவலியைக் கூட வாங்கிக்குவாங்க.

குமார் :- நீங்க சொல்லுறது முற்றிலுஞ் சரி. இப்போ கன காலமா அதைச் செய்தாச்சு இனி மாத்திறது கஸ்டம்.


காமா :- பார்த்தேளா இதைத்தான் நான் சொல்ல வந்தேன்.

குமார் :- உங்கடை கருத்துக்கு நன்றி. திலகரண்ணை உங்களுக்கும் நன்றி. நான் வரப்போறன்.

காமா :- வாங்க. நமக்குக் கோல் பண்ணுங்க.

திலகர் :- ஓம் ஓம் போட்டு வாரும்.

(திரை)


நூலாசிரியர்
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
PUBLIC LIBRARY JAFFNA